
அண்ணாவின்
ஆறு கதைகள்
BALU
BROS

# அண்ணாவின் ஆறுகதைகள்

C.N. அண்ணாதுரை, M.A.

திராவிடப்பண்ணை
34, சிந்தாமணி :: திருச்சி-2

மூன்றும் பதிப்பு: 1968

உரிமையுடையது.

11302.

விலை ரூ. 1-00

சக்திவேல் பிரஸ், திருச்சிராப்பள்ளி-2.




குழலோசையைக் கேட்டுக் குதூகலம் கொண்டு, குதித்தோடி வந்த கோமதியைத் தழுவிக்கொண்டு, அருகே வந்து நின்ற அழகு மீனாவின் முகத்தைத் துடைத்து முத்தமிட்டுக் கமலத்தின் கண்களின் அழகைப் புகழ்ந்துரைத்து, அம்புஜம் வரக் காணோமே என்று ஆயாசப்பட்டுக் கோமளத்துக்கு நேற்று இருந்த கோபம் இன்று இல்லை என்று கூறி மகிழ்ந்து, சுந்தரியின் முதுகைத் தடவிக் கொடுத்தான். கோகிலத்தின் கழுத்தை நெறித்துவிடுவது போல அணைத்துக்கொண்டான். அருகே வர அஞ்சி சற்றுத் தொலைவிலே நின்ற மரகதத்தைப் போய் இழுத்து வந்து முத்தமிட்டான். கிருஷ்ணனுடைய குழலுக்கு அவ்வளவு சக்தி இருந்தது! அந்த "நாதம்" அவ்வளவு ஆனந்தமூட்டிற்று. குழலை அழகாய்க் கையிலெடுத்து இதழினில் பொருத்தி இசை தொடுத்து, செவியின் வழியாக இருதயத்தில் புகுத்தி இன்ப வெள்ளத்திலே சுந்தரியையும், சுகுணாவையும், கருணாவையும், கமலாவையும் நீந்தும்படி செய்த கிருஷ்ணன், அதற்காகப் பெருமைப் படவுமில்லை, இந்த வெற்றிக்காக மகிழவுமில்லை. அங்கும் இங்கும் பார்த்தான், எதையோ காணவேண்டுமென்ற ஆவலுள்ளவன் போல, இடையிடையேதான் இந்தச் சல்லாபங்கள்!

"போதாதோ புவனா! இன்னமுமா குழல் ஊத வேண்டும்! புவனா! வாடி, கிட்டே! வரமாட்டாயோ? சரி, போ, போ, நீ போய்விட்டால் என்ன? இதோ மாணிக்கத்தைக் கூப்பிட்டுக் கொள்கிறேன்" என்று கிருஷ்ணன் கூறிக்கொண்டே மாணிக்கத்தை நோக்கி நடந்தான். அதே சமயம், சற்றுத் தொலைவிலே, வேலியில் படர்ந்திருந்த கொடிகளுக்கிடையே எதையோ கண்டான், களிகொண்டான், மீண்டும் குழலை வாசிக்கத் தொடங்கினான். யாருக்காகக் குழலை வாசிக்க அவன் மனம் துடித்ததோ, அந்த லீலா வேலிக்கு அப்புறமிருந்து தன்னைக் கவனிப்பதைக் கிருஷ்ணன் கண்டுகொண்டான். அதனாலே ஏற்பட்ட மகிழ்ச்சியினால், அவன் மிக்க மதுரமாகக் குழலை வாசித்துக்கொண்டே, ஆனந்தத்திலே இலயித்துக் கண்களை மூடிக்கொண்டான். சில விநாடிகளுக்குப் பிறகு கண்களைத் திறந்து பார்க்க, லீலா இருந்த இடத்திலே ஒன்றும் இல்லாததைக் கண்டு, சோகமும், கோபமும் கொண்டு, வேலிக்கு அருகே சென்று பார்க்க, வேக வேகமாக லீலா போய்க்கொண்டிருக்கக் கண்டு, சலிப்படைந்து, கோமதியைக் கோலால் அடித்து, மீனாவின் முதுகிலே அறைந்து, சுந்தரி மீது கல்விட்டு எறிந்து, மரகதத்தின் காதைப் பிடித்துக் கரகரவென்றிழுத்து வந்து நிறுத்தி, ஊருக்குள் ஓட்டிக் கொண்டுபோய்ச் சேர்த்தான்!

ஆம்! கிருஷ்ணன், திரிபுரம் ஜெமீன் மந்தையிலே, வேலை பார்ப்பவன்! சுகுணாவும், சுந்தரியும், கோமளமும், கோமதியும், மந்தைச் சுந்தரிகளே! லீலா தவிர! லீலா, ஜெமீன்தாரர் வீட்டுப் பெண், மற்றவை, அவன் வீட்டு மாடுகள். கிருஷ்ணன், குழல் ஊதிக் குதூகலப்படுத்த எண்ணியது லீலாவை, நாலுகால் நளினிகளையல்ல!! ஆனால் அந்தப் பசுக்களின் இருதயம் வேறுவிதமாகவும், பாவையின் இருதயம் வேறுவிதமாகவும் அமைந்திருந்தது. ஜெமீன் மந்தைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட கிருஷ்ணன் குழல் ஊதுவதிலே மகா சமர்த்தன் என்றும், அவனுடைய இனிய இசையிலே, இன்புற்று, மந்தையே மகிழ்ச்சியிலே

மூழ்குவதாகவும் கேள்விப்பட்ட லீலா, ஒருநாள் சென்றாள் மாடுகள் மேயும் இடத்தருகே. குழலோசை அவளுக்கு இன்பமாக இருந்தது, ஒவ்வொரு நாளும் சென்றாள்! குழலின் இனிமையும், கிருஷ்ணனின் திறமையும் அபி விருத்தி அடையத் தொடங்கிற்று. அதுமட்டுந்தானா? கிருஷ்ணனுடைய, நடை உடை பாவனையும் வயற்காட்டு ரகமாக இருந்தது மாறி வயற்காட்டுச் சீனுக்கு உடை தரிக்கும் இராஜபார்ட்டுக்காரருடையது போல மாறிக் கொண்டே வரத் தொடங்கிற்று! அன்று கிருஷ்ணன், லீலாவிடம் பேசிப் பார்க்கவேண்டும் என்று அதிக ஆவல் கொண்டிருந்தான். ஆனால் அன்று ஏனனமோ லீலாவுக்கு அவசரமான வேலை, அதிக நேரம் குழலைக் கேட்கவில்லை, போய்விட்டாள். அவளை போய்விட்டபிறகு, இந்த அநாவசியமான பசுக்களுக்கு இங்கென்ன வேலை என்ற கோபத்திலேதான், மந்தையை ஊருக்கு விரைவாக ஓட்டிக் கொண்டு போனான், மனச் சங்கடம் கொண்ட மந்தை மன்னன்!

கிருஷ்ணன், தனி மனிதன், அதாவது காதலியைத் தேடித் தீரவேண்டிய கஷ்டமான கட்டத்திலே இருந்தவன்! காளையைக் கழுவி விடவும், பசுவுக்குப் புல்லிடவும், உதைக்கும் மாட்டுக்கு உத்தரவு தரவும், வலிகொண்ட வளைந்த கொம்பனுக்குச் சூடிடவும், வேறு ஆட்கள் இருந் தனர். கிருஷ்ணன், இவர்களுக்குத் தலைவன். மந்தை யோடு செல்வது, மதுரகீதம் பொழிவது, இரவிலே இருதயத்துக்கு, “இன்னம் கொஞ்சம் பொறு, நெஞ்சமே! பொறுத்தார் பூமியாள்வார்!” என்று புத்தி கூறுவது, என்ற முறையிலே காலந்தள்ளி வந்தவன். மாட்டுப் பண்ணை விஷயமாகப் பிரத்யேக அறிவும் அனுபவமும் பெற்றவனென்று சிபார்சுக் கடிதம் பெற்றவன், சாதாரண ஆளிடமல்ல, சந்திபுரம் ஜெமீன்தாரிடம். அந்தக் கடிதமே, வேலையை அவனுக்குத் தரவைத்தது. சம்பளமோ அதிகம் தேவையில்லை என்று கூறிவிட்டான்! ஜெமீன் தாரர், கிருஷ்ணனுக்கு வேலை தந்ததற்கு அதுவும் ஒரு

முக்கிய காரணம்! கிருஷ்ணன் மந்தை மன்னனான பிறகு, பட்டியிலே பல மாறுதல்கள்! மாடுகளுக்கெல்லாம் அவன் வருவதற்கு முன்பு, வளைந்தகொம்பன், வால்மொட்டை, மைக்கண்ணி, அரணைவாலன் என்று அநாகரிகப் பெயர்கள் இருந்தன. கிருஷ்ணன் பதவியிலே அமர்ந்த உடனே செய்த முதல் சீர்திருத்தம், பழைய பெயர்களை ஒழித்துவிட்டு, அழகாகச் சுகுணா, சுந்தரி, கோமளம், கோமதி என்ற புதிய பெயர்களை மாடுகளுக்குச் சூட்டியது தான்! அவன் செய்த வேறு பல சீர்திருத்தங்களிலே ஒன்று, பிரதி சனிக்கிழமையும், மாட்டுப் பட்டியிலே, பாட்டுக் கச்சேரி நடத்துவது. இந்த விசித்திர சித்தனைப் பற்றி ஊரிலே வேடிக்கையாகப் பேசிக்கொள்வார்கள். அவன் கவலைப்படுவதில்லை. எந்தத் தொழிலானால் என்ன? மாடு மேய்ப்பவன், என்று. ஏன் அந்தத் தொழிலைப்பற்றி இழிவாகக் கூறவேண்டும்! மந்தை மன்னன்! என்று நான் கூறுவேன், அது சாதாரணமான, கேவலமான தொழிலல்ல. மகேசுவரனே, பசுக்களாகிய நமக்குப் பதியாக இருக்கிறார் என்று சைவசாத்திரம் கூறுகிறது, அரியின் அவதாரமான கிருஷ்ணன், மாடு மேய்ப்பவனாக இருந்தார். மாடுகளின் பொருட்டு மக்களின் மண்டை உடைந்த கதைகள் உண்டு, என்று கூறுவான்.

படித்த பயல் ஏன் இந்த வேலைக்கு வந்தான் என்று சிலர் அவனைக் கேட்டதுண்டு. கிருஷ்ணன், கோபப் படாமல், அவர்களுக்குப் பதில் கூறுவான், நான் படித்தவன் என்பது உண்மை! ஆகையினால்தான், இந்த வேலைக்கு வந்தேன் என்பான்.

"இந்தக் காலத்திலேதான் படித்தவர்களுக்கெல்லாம் ரொம்ப திண்டாட்டமாமே? வேலையே கிடைப்பதில்லை யாமே! அதனாலேதான் பாவம், இந்தப் பிள்ளையாண்டான், ஜெமீனில் மாடு மேய்த்தாவது பிழைப்போம் என்று வந்திருக்கிறான். ஜெமீன்தாருக்கு யாராவது, இவன் படித்தவன் என்று நாலு நல்ல வார்த்தை சொன்னால்

கணக்கப்பிள்ளை வேலைக்காவது வைத்துக்கொள்வார்" என்று சிலர் பரிதாபப்படுவதுண்டு.

"பைத்தியக்காரர்கள், மோட்டார் கம்பெனி ஏஜண்டாக இருக்க மாதம் இருநூறு தருவதாகச் சொன்னார்கள், முடியாது என்று கூறிவிட்டேன். மில்லிலே ஒரு வேலை இருப்பதாகச் சொன்னார்கள், வேண்டாம் என்று கூறிவிட்டேன். இந்த மந்தை மன்னன் வேலைக்கு நான் வந்தது மதியற்ற செயல் என்று மதியிலிகள் நினைக்கின்றனர். வேலை ஏன் எனக்கு! குழலை ஊதிக் கொம்புள்ள பிராணிகளிடம் குதூகலத்தை ஊட்டுவதை விட்டு, சபைகளிலே சென்று என் திறமையைக் காட்டினால் வித்வானாகி விட முடியாதா, பணம் குவியாதா? நானாக, மனமுவந்து, இந்த வேலையைத் தேடிக்கொண்டேன். இந்த மட்ட ஏகங்களுக்கு என் திட்டம் தெரியவில்லை, இவர்களைச் சட்டை செய்யப் போவதில்லை" என்று கூறுவான், கிருஷ்ணன், தன்னுடைய பட்டி ஆட்களிடம்.

"இது ஒரு தினுசான பைத்யம்!" என்ற முடிவுக்கு ஊரார் வந்துவிட்டனர்; உண்மைக்கும் ஊரார் நினைப்புக்கும் உறவு இருந்தது! அவனுக்கு ஒரு தினுசான பைத்யமிருந்தது உண்மைதான்! அந்தப் பித்தம், அலைகடலுக்கு அருகே, மணல் மேட்டின்மீது, அழகிய நிலவொளியிலே அவன் கேட்ட ஒரு அற்புதமான கதையினால் ஏற்பட்டது!!

"அடி அமிர்தம்! படித்து முடித்துவிட்டாயா அந்தக் கதைப் புத்தகத்தை" என்று கேட்ட லீலாவின் குரலிலே தோய்ந்திருந்த இனிமை, மணலைக் குவித்துத் தலையணையாக்கி, மனதை இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டு, இருக்குமிடம் தெரிந்தால் இன்பமான மாலைக் கனவுக்குப் பங்கம் வந்துவிடுமே என்ற பயத்தால் கண்களை மூடிக்கொண்டு படுத்துக் கொண்டிருந்த வாலிபனுக்கு விருந்தாக இருந்தது, கண்களைத் திறந்தான், குரல் வந்த திக்கை நோக்கினான், இரண்டு இளமங்கைகள், பேசிக்கொண்டிருக்கக்

கண்டான், சிந்தனையையும் செவியையும் அந்தப் பக்கம் செலுத்தினான். மங்கையரின் பேச்சு நிற்கவில்லை.

"படித்துவிட்டேன் லீலா! என்ன அற்புதமான கதை தெரியுமோ அது! இன்பத்திலே இரண்டாவது இடம் இந்தக் குரலுக்கு கிடைத்தது.

"என்ன கதை அது, அற்புதமான கதை!!"

"அற்புதம் என்றால் அற்புதமேதான்! கதையிலே வருகிற கதாநாயகியின் பெயர் என்ன தெரியுமோ?"

"அற்புதம் என்றே பெயரா அவளுக்கு"

"இல்லை! அதிசயம்! என்று அவள் பெயர்"

"சரி, அந்த அதிசயவல்லி கதையைச் சொல்லடியம்மா அற்புதவல்லி!"

"சொன்னால் என்ன தருவாய்!"

"உன் புருஷனை விட்டு ஒரு முத்தம் தர சொல்லுகிறேன்"

"போடி!"

இந்த இடத்திலே வாலிபன், மிகக் கஷ்டப்பட்டே சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

"சொல்லடி என்றால் ......"

"சொல்லட்டுமா?'!

"ஜோதிடக்காரனைக் கூப்பிடட்டுமா. முகூர்த்தம் பார்க்க. சொல்லடி கதையை என்றால், என்னமோ பிரமாதமான பிகுவு செய்கிறாள்"

"சொல்கிறேன். நில்லடி, கிள்ளாதே, கிரீஸ் நாட்டுக் காதல் கதை அந்தப் புத்தகம்"

"கிரீஸ் நாட்டிலே கூட அதிசயம் என்று பெயர் வைத்தார்களா?"

"பெரிய கேள்வி கேட்டுவிட்டாய் போடி! கிரீஸ் நாட்டுக் கதை, அதைத் தமிழிலே யோகானந்த சாரதியார் மொழி பெயர்த்திருக்கிறார்"

"யோகானந்த சாரதியார், காதல் கதையைத்தானே மொழி பெயர்க்க வேண்டும், வேடிக்கைத்தான், கதையைச் சொல்லு"

"கிரீஸ் நாட்டிலே ஒரு ஊரிலே, அதிசயம் என்ற ராஜகுமாரி ஒருவள் இருந்தாள் அவள் நல்ல அழகி. உன்னைப் போல என்று வைத்துக் கொள்ளேன். ஆனால் உனக்கு இருப்பதுபோல, கிளிமூக்கு இல்லை அவளுக்கு?"

"ஏண்டி! நீ கதை சொல்லப் போகிறாயா, உதை வாங்கப் போகிறாயா?"

"கதைதாண்டி சொல்கிறேன். அதிசயத்தை வர்ணிக்க வேண்டாமா, அழகான பெண் என்று இரண்டே எழுத்துக்களிலேயே முடித்து விடுகிறார் கதை எழுதியவர், ஆறு பக்கமோ ஏழு பக்கமோ எழுதியிருக்கிறார். படித்தால் தானே தெரியும் உனக்கு. கார் நிறக் கூந்தல், கமலக் கண்கள், வில் போன்ற புருவம், இன்னம் எல்லா அழகும் என்று வைத்துக் கொள்ளேன், அவளைக் கலியாணம் செய்து கொடுக்க வேண்டிய ஏற்பாடுகள் நடந்தன"

"சரி பழைய கதைதான், பெற்றோர்கள் ஒரு இடம் பார்த்திருப்பார்கள். இவளுக்கு வேறு ஒருவன் மீது காதல் இருக்கும், இதனாலே வீட்டிலே சண்டை பிறந்திருக்கும், அவள் அழுதிருப்பாள், அதுதானே"

"அவள் அழுதாள், சண்டை நடந்தது அதெல்லாம் கதையிலே உள்ளதுதான், ஆனால், அரண்மனையிலே சண்டை நடந்தது, நீ சொல்கிறபடி அல்ல. அதுதான், அந்தக் கதையை அற்புதமான கதை என்று நான் சொன்னேன். அதிசயத்தை, அவளுக்கு இஷ்டமான புருஷனைக்

கலியாணம் செய்து கொள்ளும்படி வீட்டிலே வற்புறுத்தினார்கள், அவளோ, அது முடியாது, நீங்களாகப் பார்த்து யாரை நான் கலியாணம் செய்துகொள்வது என்று ஏற்பாடு செய்யுங்கள், நானாகத் தேடிக்கொள்வது முடியாது, முறையாகாது, எனக்குத் தெரியாது என்று சொன்னாள்"

"அடடே! இது அதிசயமாகத்தான் இருக்கிறதடி. என்ன என்ன இன்னொரு தடவை சொல்லு"

'உனக்கு யார் மீது இஷ்டமோ அவனைக் கலியாணம் செய்துகொள் என்று வீட்டிலே வற்புறுத்தினார்கள் அவள் நான் யாரைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று நீங்களே ஏற்பாடு செய்யுங்கள், நானாக வரனைத் தேடிக்கொள்ள முடியாது என்று கண்டிப்பாகக் கூறி விட்டாள். வீட்டிலே வற்புறுத்த, அதிசயம் ஓரேயடியாகக், கூனனாலும், குருடனானாலும், முடவனானாலும், முட்டாளானாலும், நீங்கள் பார்த்து யாரைக் கலியாணம் செய்துகொள்ளச் சொல்கிறீர்களோ, அவனைத்தான் மணம் செய்து கொள்வேன் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டாள்."

'ஏண்டி! அவளுக்கென்ன பைத்தியமா?'

"அவளுக்குப் பைத்தியமில்லை, அவளுடைய தகப்பனாருக்குப் பைத்யம்! அந்தப் பைத்தியக்கார அரசர், சாவதற்கு முன்பு, மந்திரி சேனாதிபதி பொக்கிஷதார் ஆகிய மூவரையும் கூப்பிட்டு, ஒரு சாசனம் கொடுத்தார். அதிலே, என் மகள், நீங்கள் தெரிந்தெடுக்கும் ஒருவனைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டும், என்பது என் விருப்பம். அப்படி அவள் நடந்துகொண்டால் தான் இந்த மண்டலத்துக்கு அவள் இராணியாக வேண்டும். இதற்கு மாறாக, அவள் இஷ்டப்படி யாரையேனும், அவள் கலியாணம் செய்துகொள்வதானால் இந்த இராஜ்யத்தை அவள் ஆட்சி செய்யும் உரிமையை இழந்து விடவேண்டும். நீங்கள் வேறு ஒருவரையோ, உங்களில் ஒருவரையோ ராஜ்யாதிகாரியாக்கிக் கொள்ளலாம் என்று நாம் உத்தரவிடுகிறோம் —என்று குறித்திருந்தார்."

"சரியான பைத்யமடி; அந்த அரசன்"

"இல்லை, அவனும் ஒரு காரியப் பைத்யம்தான் மந்திரி, சேதினபதி, பொக்கிஷதார், ஆகிய மூவரும், அயோக்யர்கள் என்பது, அரசனுக்குத் தெரியும். தனக்குப் பிறகு, தன் ஒரே மகள், அதிசயம், இந்த அயோக்யர்களின் சதியினுல் சங்கடப்படவேண்டிவரும் என்று அஞ்சினன் அதிசயத்துக்கு யார் புருஷனுக வருகிருனே, அவனைப் பற்றி அவதூறுகள் கிளப்பி, மக்களைத் தூண்டி விட்டுத் தொல்லை விளைவிப்பார்கள் என்று பயந்த மன்னன், அதிசயத்துக்குக் கணவனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை அவர்களிடமே தந்துவிட்டால், பிறகு அவர்களாகப் பார்த்து யாரை அதிசயத்துக்குப் புருஷனுக்குகிருர்களோ, அதே ஆள்மீது அவதூறு கிளப்பினுல் ஜனங்கள், அந்த மூவரையே குறை கூறுவார்களே தவிர அதிசயத்தின்மீது ஆத்திரப்பட மாட்டார்கள் என்று யோசனை செய்து தான் மன்னன், சாசனம் எழுதினுன்."

"அது சரி! ஆனுல், அதிசயம், தாஞக ஒரு புருஷனைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவும் உரிமை இருந்ததே சாசனப்படி!"

"இருந்தது, ஆனுல் நிபந்தனை இருந்ததே. தனக்கு இஷ்டமானவனைக் கலியாணம் செய்து கொள்வதனுல், இராஜ்யத்தை விட்டுவிட வேண்டும் என்றல்லவா சாசனம் இருந்தது. அதனுடைய கருத்து என்னவென்ருல், அப்படி அதிசயத்துக்கு யார் மீதாவது உண்மையான காதல் ஏற்படுமானுல், அது யாராவது ஒரு வீரமுள்ள அரச குமாரனுகத் தானே இருப்பான், அவனுக்காக அதிசயம் ஒரு இராஜ்யத்தையே தியாகம் செய்தால் நஷ்டமில்லை! அவன் வீரத்தால், அவள் இழந்த இராஜ்யமும் மீண்டும் கிடைத்து விடும் என்று அரசன் நினைத்தான்."

"அது எப்படியடி அவன் அப்படி நினைக்கலாம்? அந்த அதிசயம் என்ன, அரசகுமாரனையே தாஞ காதலிப்பாள்? அரசகுமாரி அரச குமாரனைத்தான் காதலிக்க

வேண்டும் என்று விதியா? சட்டமா? காதலுக்குப் பிறகு வேலையே இல்லையே. சீச்சீ! கதை எனக்குப் பிடிக்கவில்லை''

''கேளடி மேலே! அதற்குள் உன்னுடைய மெடலைக் கொடுக்க மறுக்கிறாய். பெரும்பாலும் அந்த அரசன் எண்ணியபடி தானே நடக்கிறது. இராஜகுமாரி இராஜகுமாரனைத்தானே மணம் செய்துகொள்கிறாள். உன்வரையிலே பாரேன். என்ன நடக்கும்? நீ ஒரு ஜெமீன்தார் மகள், இன்னொரு ஜெமீன்தாரன் மகனைத்தானே நீ கலியாணம் செய்து கொள்வாய்?

''அது தான் தப்பு! என்னை நீ சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்னைப்பற்றியும் உனக்குத் தெரியவில்லை, காதலைப்பற்றியும் உனக்குத் தெரியவில்லை''

''காதலிலே நீ கரை கண்டவள்! யாராவது ஒரு ஜெமீன்தாரன் மகனைக் கலியாணம் செய்துகொள்ளாமல், உங்கள் தோட்டக்காரன் மகனைக் கலியாணம் செய்து கொள்ளப் போகிறாயா?

''தோட்டக்காரன் மகன் தானா? ஏன், எனக்குக் காதல் ஏற்பட்டால், எங்கள் மந்தையிலே மாடு மேய்ப்பவனைக் கூட நான் கலியாணம் செய்து கொள்வேன்''

''ஓஹோ! சரி, சரி, நீ பெரிய காதல் சுவை அறிந்தவள், உன் கதையை நடக்கிறபோது பார்ப்போம், நடந்த கதையைக்கேள். என்னமோ அந்த பைத்தியக்காரன் அப்படி ஒரு ஏற்பாடு செய்து விட்டு இறந்தான். உடனே, மூவர் தானே அரண்மனைக்குப் பொறுப்பாளியானார்கள், அவர்கள், எப்படியாவது அதிசயத்தை அவள் இஷ்டப் படும் கலியாணம் செய்து கொள்ளும்படி செய்து விட்டு, ராஜ்யத்தை அடைய வேண்டும் என்று சதி செய்யத் தொடங்கினார்கள். காதலின் மேன்மையைப்பற்றிய கவிதைகளை யெல்லாம் கொடுத்தார்கள், படிக்க காதல் ரசமுள்ள நாடகங்களை அரண்மனையிலே நடத்தச் செய்து அதிசயத்தைக் காணச் செய்தார்கள். காதலை விளக்கும் சித்திரங்

களைத் தயாரித்து அரண்மனையிலே நிரப்பினார்கள். அவர்கள் தங்களாலானதை எல்லாம் செய்து பார்த்தார்கள், அதிசயத்தின் மனதிலே காதல் முளைக்க வேண்டும் என்று முடியவேயில்லை. அவள் ஒரே பிடிவாதமாக, எனக்கேற்ற கணவனை நீங்களேதான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறி விட்டாள். அவளுக்குச் சாசனத்தின் தகவல் தெரியும் என்பது, அந்த மூன்று முட்டாள்களுக்குத் தெரியாது. அரசகுமாரி! நேற்று நமது நந்தவனத்திலே இன்னிசை பாடிய இளையவனிடம் தங்களுக்கு இஷ்டமா? என்று கேட்பார் மந்திரியார். "ஆமாம், இசைவாணனிடம் எனக்கு எப்போதும் மதிப்பு உண்டு" என்று கூறுவாள் அறிவுள்ள அதிசயம். மணம் செய்து கொள்ள......" என்று தந்திரமாக வலைவீசும் பேச்சை ஆரம்பிப்பார் மந்திரியார். "தங்கள் உத்தரவு அதுவானால் தடையில்லை" என்று தயக்கமின்றிக் கூறுவாள் அதிசயம்.

"எங்கள் உயிரை வாங்க வேண்டாம். எங்களுக்குத் தெரியுமா இதெல்லாம்? சரியான வேலை தருகிறீர்கள், ஆள் தேடும் வேலை" என்று கோபிப்பார்கள் மூவரும் சில சமயம்.

"தேடித் திரிவானேன், ஓலை அனுப்பிப் பல தேசத்து மன்னர்களையும் வரவழைத்து விடுங்கள்" என்று யோசனை கூறுவாள் அதிசயம். அகப்பட்டுக்கொண்டாள் அரசகுமாரி என்று நினைத்து மந்திரியார், "ஆஹா அது செய்கிறோம். சகல மன்னரையும் தருவிக்கிறோம். அவர்களிலே யாருக்கு...என்று சுயம்வர இலட்சணத்தை மனதிலே புகுத்துவார். உங்கள் தந்திரம் என்னிடம் பலிக்காது என்று கூறுவது போல ஒரு தடவை புன் சிரிப்புடன் இருந்து விட்டு, உடனே, "யாருக்குத் தாங்கள் மாலையிடச் சொல்கிறீர்களோ, அவரை நான் மணம் செய்து கொள்வேன்" என்று கூறுவாள் அதிசயம். "அதற்கு ஒரு மந்தையை ஓட்டிக்கொண்டு வருவானேன்" என்றுகோபிப்பார் சேனாபதி ஒரே இடத்திலே இருந்தபடி சிரமமில்லாமல்

எனக்கு ஏற்றவன் யார் என்று நீங்கள் தேர்ந்தெடுக்கலாமல்லவா? என்று சாமர்த்தியமாகப் பதில் கூறுவாள் அதிசயம்''

''அது கிடக்கட்டும், அவளுக்கு உண்மையிலேயே யாரிடமும் காதல் ஏற்படவேயில்லையா?''

''நல்ல கேள்வி கேட்டு விட்டாய் போடி! எந்தப் பெண்ணுக்குத்தான் காதல் உண்டாகாது? எல்லோருக்கும் உண்டாகித்தான் தீரும். ஆனால் எத்தனை பெண்கள் தாங்கள் கொண்டுள்ள காதலை வெளியே சொல்லமுடியும்? சொல்லித்தான் என்ன பிரயோஜனம்? அவர்கள் இஷ்டப்படியா நடக்கும்? சேலைக்கும் நகைக்குமே இன்னமும், பெரியவர்கள் இஷ்டம் சட்டமாக இருக்கிறது. காதல் விஷயத்திலே, என்னடி செய்யமுடியும் பெண்கள்? கதைப் புத்தகம் படிக்கலாம்.''

''ஓஹோ, அதுதான் நீ கதை படித்துத் திருப்தி அடைந்து வருகிறாயோ?

''போதுமடி சிரிப்பு, நான் கதை படித்துத் திருப்தி அடைவது இருக்கட்டும், நீ அதைக் கேட்டே திருப்தி அடைகிறாயல்லவா!''

''சரி, சரி, வாயாடாதே, கதையை முடி!!''

''எப்படியாவது கலியாணத்தை முடித்தாக வேண்டும் என்று துடித்தனர் மூவரும். இந்தச் சமயத்திலே, நீ கேட்டாயே, அதிசயத்திற்கு யார் மீதும் உண்மையான காதல் உண்டாகவில்லையா என்று அது ஏற்பட்டது ஒரு சுந்தரமான புருஷன், அடுத்த இராஜ்யத்து இளவரசன், அவன் ஒரு நாள் அதிசயத்தைக் கண்டான்,''

''பஞ்சபாணம் பாய்ந்தது......''

''இல்லை! ஒரே ஒரு பாணம் பாய்ந்தது அதிசயத்தின் மீதல்ல, அவள் வளர்த்து வந்த மான் மீது, அரச குமாரன் விட்ட பாணமல்ல, அவனைத் திருடன் என்று சந்தேகித்து

அதிசயத்தின் பாதுகாப்புக்காகப் பூங்காவனத்திலே உலவி வந்த காவலாளி விட்டபாணம்."

"அவன் என்ன, காவலாளி கண்டு திருடன் என்று நினைக்கும்படி அவ்வளவு கேவலமான உருவமுடையவனு?"

"நான் தான் முதலிலேயே சொன்னேனே, சுந்தரமான புருஷன் என்று, அங்கே அவன் மாறுவேடத்திலே வந்திருந்தான்"

"அப்படிச் சொல்லு."

"மான் மீது பாணம் பாய்ந்தது, அரசகுமாரி அழுதாள். தான் விட்ட கணை தவறி மான் மீது பட்டது தெரிந்தால் உயிருக்கு உலை வருமென்று பயந்து காவலாளி ஓடிவிட்டான். மாறுவேடத்திலிருந்த மன்னன் மகன் அவளருகே சென்று தேறுதல் கூறிப், பாணத்தை மெள்ள எடுத்து விட்டுப் பச்சிலை பூசி, மானுக்குச் சிகிச்சை செய்து கொண்டே, தேனைக் கலந்து பேசத் தொடங்கினுன்.

"போதுமய்யா உமது பேச்சு! என் நந்தவனத்திலே நுழைந்ததுமன்றி, என் மானையுங் கொல்லப் பார்த்தீர்" என்று கோபத்தோடு பேசினுள் அதிசயம்.

"கணை விட்டது நான் அல்ல கையிலே வில் இல்லை, முதுகிலே அம்புறுத் துணியுமில்லை, பாருங்கள்" என்று விநாயகப் பதில் கூறினுன் அரச குமாரன், அவள் பார்த்தாள்! வில்லும் அம்பும் இல்லை, ஆனுல் அவனை வெல்லும் புன்னகையும் கண்களிலே காதல் ஒளியும் கண்டாள் மனதிலோர் வித இன்பம் புகக் கண்டாள், மானைத் தடவியபடி மௌனமாகக் குனிந்து நின்ருள், மானைத் தடவிக் கொடுத்த இருவரின் கரங்களும் சந்தித்தன, இருவரின் விழிகளும் உடனே சந்தித்தன. ஒருவரின் விழி மற்றவரின் இருதயத்தைத் தடவிப் பார்க்கத் தொடங்கின. காதல் பிறந்தது. அவளுக்குக் கவலையும் பிறந்தது. இளைஞனை மணந்தால் ராஜ்யத்தை இழக்கவேண்டும் என்ற கவலை இல்லாமற்போகுமா ?

'நீர் யார்? என்று கேட்டாள் ராஜகுமாரி, நானா? நான் ஓர் பாக்யசாலி!" என்றான் அரசகுமாரன். "ஊர்?" என்று கேட்டாள் அவள். பிறந்த இடம் வீணாபுரி, இப்போது இருக்குமிடம் இன்பபுரி" என்றான் அவன். கவியோ?" என்று அரசகுமாரி கேட்டாள், அவனுடைய பேச்சின் நடையழகைப் புகழ்ந்து. "கால்கள் இரண்டே காணாய்" என்று அவன் தன் புலமையையும் நகைச்சுவையையும் காட்டும் முறையிலே பதில் கூறினான்."

"எனக்கு விளங்கவில்லையே!"

"கவி, என்றால் குரங்கு என்றும் ஒரு அர்த்தம் உண்டு அவள் அவனை நீர் கவியா என்று கேட்டதும் அவன் எனக்கு இரண்டே கால்கள், நான் குரங்கல்ல என்று கூறினான்."

'அந்தக் கோணல் பேச்சுப் பேசுவானேன் அவன். ஆளுக்கு குரங்கு புத்தி போலிருக்கிறது"

"புத்தி சரியாகத்தானடி இருந்தது. பேச்சு குளறுமல்லவா, சம்பந்தா சம்பந்தமின்றித் தானே இந்த ஆண்கள், திடீரென ஒரு பெண்ணைக் கண்டால் பேசுவது வழக்கம்"

'உண்மையான பேச்சு! பார்வை, பேச்சு, எது சரியாக இருக்கிறது, பெண்ணைக் காணும் ஆணுக்கு, சரி, கதையைச் சொல்லு."

"இருவருக்கும் நெடுநேரம் பேச்சு நடந்தது, காதல் ஒப்பந்தம் ஆகி விட்டது"

"என்ன? அவனைக் கலியாணம் செய்துகொள்வது என்றா?"

"ஆமாம்! அவள் அந்தத் தீர்மானத்திற்கு வந்தாள். அவனோ, மகிழ்ந்தான். ஆனால் ஒரு யோசனை கூறினான். நமது காதல் இரகசியமாகவே இருக்கட்டும். மூன்று முண்டங்களையும் சரியானபடி அவமானப்படுத்த வேண்டும். நான் முதலிலே, நல்ல படை திரட்டி வைத்து விடு

கிறேன், உங்கள் இராஜ்யத்து எல்லையில், சாசனத்தின்படி சரியான புருஷனைத் தெரிந்தெடுக்கும்படி அவர்களை நீ வற்புறுத்தியபடி இரு. கடைசியில் யாரையாவது அவர்கள் பிடித்துக் கொண்டு வந்து உன் தலையிலே கட்டப் பார்ப்பார்கள். அவன் எப்படிப்பட்டவனானாலும், சம்மதித்து விடு. கலியாண ஏற்பாடுகளும் நடக்கட்டும். அந்தப் பந்தலிலேயே, மூவரையும் அவமானப்படுத்தி, நான் உன்னைக் கலியாணம் செய்துகொள்கிறேன் என்று அரசகுமாரன் கூறினான். அவர்களின் காதல் ஒப்பந்தத்தை முத்தங்களால் பொறித்துக் கொண்டனர்.

கோபமும் சலிப்பும் கொண்ட மூன்று சதிகாரரும். யாராவது தலையாட்டியைப் பிடித்து அதிசயத்துக்குக் கலியாணம் செய்துவிட்டு அவனை ஆயுதமாகக் கொண்டு அதிகாரத்தைத் தங்கள் கையிலே வைத்துக்கொள்ளவேண்டும் என்ற ஏற்பாட்டுக்குத் துணிந்து விட்டனர். அதற்காக ஒரு தலையாட்டியைத் தயார் செய்து பழக்கியும் விட்டனர். அவன் ஒரு சாதாரணப் போர் வீரன். முதலிலே பயந்தான், பிறகு ஆசை அவனைப் பிடித்துக் கொண்டது. சதிகாரரின் யோசனைக்கு இணங்கினான். அதிசயம் அவனை மணாளனாக ஏற்றுக்கொள்ளச் சம்மதித்தாள். கலியாண நாள் குறிக்கப்பட்டது. அதிசயம் தான் காதலித்த இளவரசனுக்கு ஓலை அனுப்பினாள். ஆபத்து நெருங்குகிறது, அடியாளைக் காப்பாற்ற வாரும், எனக்கு இராஜ்யம் வேண்டாம், தங்களுடன் வாழும் ரசமான வாழ்க்கைதான் வேண்டும். எதையாவது எண்ணிக் கொண்டு, கடைசி நேரத்திலே, தாங்கள் கலியாணப் பந்தலுக்கு வராமலிருந்துவிட்டால் என் கதி என்னாகும்? யாரோ ஒரு வழிப்போக்கன், வஞ்சகன், அயோக்கியன் என்னைத் தொட நான் சம்மதியேன். மணப்பந்தல் பிணப் பந்தலாகும். மன்னா! மறவாதே! குரங்குக்குப் பூமாலையா? என்று எழுதியிருந்தாள். கலியாணத்திற்கு நாலு நாட்கள் இருக்கையிலே, மாப்பிள்ளையை மன்னன் மகன் இரகசியமாகச் சந்தித்து காதலின் மேலான தன்மையை விளக்கினான். அரசகுமாரியின் ஓலையைக் காட்டினான், தனது

படை பலத்தையும் உறுதியையும் எடுத்துக் கூறினான். எந்தக் காரணம் கொண்டும் அந்தக் கலியாணம் நடைபெறாது என்பதை அவன் மனதிலே பதியும்படி செய்து, தன்னுடைய ஏற்பாட்டுக்கு அவன் இணங்கினால், பரிசு தருவதாக வாக்களித்தான். போர்வீரன், காதலின் புனிதத் தன்மையையும், அரசகுமாரனின் போர்த்திறனையும் உணர்ந்துகொண்டு, அரசகுமாரனுக்கு உதவுவதாகச் சம்மதித்தான். எதுவும் நடைபெறாதது போலவே நடந்து கொள். மணப்பந்தலுக்கு நான் வருவேன், உன்னுடைய தோழனாக இருப்பேன், நான் எது சொன்னாலும் "ஆமாம்" என்று சொல், எது செய்தாலும் "சரி" என்று கூறு. உனக்கு ஒரு ஆபத்தும் வராதபடி நான் பார்த்துக் கொள்ளுகிறேன் என்று கூறினான். இருவரும் நண்பராயினர். சதிகாரருக்கு இது தெரியாது.

கலியாணம் ஆடம்பரமாக ஆரம்பமாயிற்று. புரோகிதன் உரத்த குரலிலே சுபவேளையிலே மந்திரங்களைக் கூறத் தொடங்கினான். மணப்பெண் நெருப்பின்மீது நடப்பவள்போல நடந்துவந்து சேர்ந்தாள். மாப்பிள்ளை கெம்பீரமாக அமர்ந்திருந்தான். தங்களின் சமர்த்தை தாமே புகழ்ந்துகொண்டு மூவரும் முடிதரித்த மன்னர் போல் உட்கார்ந்தனர். மாப்பிள்ளைத் தோழனைத் தன் காதலன் இருக்கக் கண்டதும், அரசகுமாரிக்குத் தைரியம் பிறந்தது.

"முகூர்த்த வேளை நெருங்குகிறது, நடக்கட்டுமே" என்றார் மந்திரியார். மாப்பிள்ளைத் தோழனாக மாறுவேடம் பூண்டிருந்த அரசகுமாரன், "அரசே! இந்தக் கலியாணத்துக்கு ஏற்பாடு செய்த இந்த மூன்று உத்தமர்களுக்கும் பரிசுகள் வழங்கிய பிறகே, மாலைசூட்டப் போவதாகச் சொன்னீர்களே" என்று மணக்கோலத்திலிருந்தவனை நோக்கிக் கேட்டான். முன் ஏற்பாட்டின்படியே அவன், "ஆமாம்!" என்றான். மூவரும் திகைத்தனர். "பரிசுகளைத் தரவோ?" என்று கேட்டான் இளவரசன். "ஆமாம்" என்றான் மாப்பிள்ளை. இளவரசன் தன்

ஆட்களை அழைத்து ஏதோ கொண்டுவரச் சொன்னான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் மூன்று கழுதைகளைக் கொண்டுவந்து வேலையாட்கள் நிறுத்தினர். மூவருக்கும் அடக்கமுடியாத கோபம் பிறந்தது. மணவினைக்கு வந்திருந்தவர்களும், இதென்ன விந்தை என்று கூறினர். "அரசே! இந்தப் பரிசுப் பரிகளின்மீது இவர்களை ஏற்ற வேண்டியதுதானே" என்று கேட்டான் இளவரசன், "ஆமாம்!" என்றான் தோழன். அரசகுமாரி சிரித்தாள், மக்கள் ஆத்திரமடைந்தனர், இதற்குள் ஊருக்குள்ளே, சிறு சிறு பிரிவாக வந்து சேர்ந்த இளவரசனின் படை, ஆத்திரமடைந்த மக்களை அடக்கத் தொடங்கிற்று. கழுதை மேல் பலாத்காரமாக மூவரையும் தூக்கிவைத்துக் கட்டச் செய்தான் இளவரசன். கலியாணப் பந்தலில் ஒரே குழப்பமாகிவிட்டது. சன்மானம் கிடைக்காமற் போகிறதே என்று புரோகிதர் புலம்பினார். உடனே மாறுவேடத்தைக் கலைத்துவிட்டு, நின்றான் இளவரசன். அவன் மீது சாய்ந்து கொண்டு புன்னகை புரிந்தாள் அதிசயம். பிறகு மக்களிடம், சாசனத்தின் முழு விவரத்தையும், சதிபுரிந்த மூவர் செயலையும் கூறினாள். மக்களின் கோபம் சதிகாரர்மீது பாய்ந்தது. ஒருபுறம் கலியாண ஊர்வலம் நடந்துகொண்டிருக்கையில் மற்றோர்புறம் கழுதைமீது ஏறிய கனவான்களின் ஊர்வலம் நடந்தது. இராஜ ஊர்வலத்திலே கூட்டம் குறைவுதான்! இளவரசன் தனக்கு உதவிபுரிந்த நடிப்பு மாப்பிள்ளைக்கு நல்ல பரிசுகள் தந்தான். அதிசயராணியும் அவளை மணம் புரிந்துகொண்ட அழகேச மன்னனும் அனேக ஆண்டுகள் நீதிநெறி வழுவாமல் அரசாண்டு வந்தனர். அவ்வளவுதான் கதை. ஆனால் அதிலே உள்ள காதலைப்பற்றிய வர்ணனைகளைப் படித்தால் பெண்களுக்குப் பைத்தியம் பிடித்துவிடும்."

"அதென்னடி அம்மா, பெண்களுக்குத்தானா அவ்வளவு சபலபுத்தி. அவர்கள்தானா காதல் விஷயமாகப் படித்தால் பைத்தியமாவார்கள். ஆண்கள் படித்தால் மட்டும் பைத்தியம் பிடிக்காதா?

"ஆண்களுக்குப் பரிந்து பேசுவதாகவா நீ நினைத்துக் கொண்டாய்? போடி அசடே! பெண்களுக்குக் காதலைப் படித்தால் பித்தம் பிறக்கும். ஆண்கள் அதுபோலப் படிக்கவே தேவையில்லை அவர்களுக்குத் தான் பெண்ணைக் கண்டாலே பித்தம் தானாகப் பிறந்து விடுகிறதே"

"அப்படிச் சொல்லு! அற்புதமான கதைதாண்டி, நான் கூடப் படிக்க வேண்டும். மனதுக்கு இசைந்தவன் மாடு மேய்ப்பவனாக இருந்தாலும் அவனோடு வாழ்வது தான் இன்பம்"

* * *

அமிர்தம், அன்று சொன்ன கதை, கிரேக்க ஆசிரியர் எவரும் எழுதியதல்ல! யோகானந்தரின் மொழி பெயர்ப்புமல்ல. அவளுடைய கற்பனை! இந்த அற்புதமான கதையைக் கேட்டபோது முளைத்தது கிருஷ்ணனுக்கு பித்தம், கிருஷ்ணன் கதை பேசிக்கொண்டிருந்த கன்னியர் போலவே, கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்தவன தான். கடலோரத்திலே வழக்கப்படி மாலை வேளையிலே உலவச்சென்று, இந்த உல்லாசிகளின் கதையைக் கேட்டான். கதையின் போக்கைவிட, லீலாவின் காதல் விளக்கம் அவனுக்கு மிக மிகப் பிடித்தது. மந்தையிலே மாடு மேய்ப்பவனானாலும்! ஆஹா! எவ்வளவு உயர்தரமான உத்தமமான, தெய்வீகக் காதல் இது, என்று எண்ணி எண்ணிப் பூரித்தான். மாடு மேய்த்துத்தான் இப்படிப் பட்ட மங்கையைப் பெற முடியும் என்றாலும் சரி, இவளுடைய காதலையே பெறுவது என்று தீர்மானித்தான் அவனுக்கு அடுத்தநாள் முதல், ஸ்நோவும், பவுடரும், செண்டும், சிகரெட்டும், தையற் கூலியும், வாஷிங் கம்பெனிப் பாக்கியும், சலூன் செலவும் அதிகரித்து விட்டது காதல், காதல், காதல் பிறந்திடில் காசுபோதல் என்றாகி விட்டது. கிருஷ்ணன் F. A. வின் நிலைமை.

பர்மாவிலே வியாபாரம் செய்யச் சென்ற அவன் தகப்பனாரின் கதியோ, படுமோசமாகிவிட்டது. பெருத்த நஷ்டம், ஊர் திரும்பினார், பட்டை விபூதியும், பழிதீர்த்து

ஈசுவரர் கோயில் படிக்கட்டுமே கதி என்று, கிருஷ்ணனின் கல்லூரிப்படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. அந்தப் படிப்பு இடையிலே பட்டுப்போனதே யொழிய காதல் படிப்பு துளிர்விட்டபடியே இருந்தது. காதற்கதைகளை ஆசிரியராகக் கொண்டான். தோட்டக்காரியை மணந்துகொண்ட மன்னன் கதை, குதிரைக்காரனை மணந்துகொண்ட ராஜகுமாரி சரித்திரம் முதலியவைகளைப் படித்தான் பரிட்சைக்குத் தயாராக! ஒரு கதாசிரியர் எழுதினுர். "பார்த்தவுடனே ஒரு மங்கையின் மனதிலே உன்னைப் பற்றி மதிப்புப் பிறக்க வேண்டுமானுல் உடை, உடை, உடை அதுதான் முக்கியம். தம்பி நீ தரித்திரத்திலே புரண்டாலும், எந்த மங்கையிடம் வெற்றி பெற விரும்புகிருயோ. அவள் காணும்போது, உன் உடை உயர்தரமானதாக, நாகரீகமாக கூடுமானுல் ஆடம்பரமாக இருக்கவேண்டும்" என்று புத்திகூறினுர். ஏழ்மைக்கும் விலை உயர்ந்த உடைக்கும் பொருத்தமிராதே, என்பது பற்றிய கவலையை அந்த ஆசிரியர், வாசகருக்கே விட்டுவிட்டார். ஏழையாக இருந்தாலும் ஆடம்பர உடையைப் பெறும் விதம் என்ன என்பது பற்றியும் அவர் எழுதவில்லை! வேருேர் ஆசிரியர், "படாடோபமாக உடை அணிந்தவர்களைக் கண்டாலே பாவையர் விரும்ப மாட்டார்கள்" என்று எழுதிவிட்டார்." மற்ருெருவர், 'பணிவு! பணிவு! அந்தப் பூஷணம் உங்களிடம் உண்டா என்றுதான் பெண் இனம் கேட்கிறது. அவர்களைக் காணும்போதே ஒரு பணிவு, ஒப்புக்காவது, பாவனைக்காவது, உங்களுக்கு இருக்க வேண்டும். பேச்சிலே, செயலிலே, நடை உடை பாவனையிலே பணிவு காட்டினுல், இணங்காத பெண் இகபரம் இரண்டிலுமில்லை" என்று தீட்டிவிட்டார். "காதலிலே வெற்றிதானே வேண்டும்! இதோ அதற்கு மார்க்கம்" என்ற பீடிகையுடன் துவக்கினுர் இன்னுமொருவர், கிருஷ்ணன் அதைப் படித்து மனதைக் குழப்பிக்கொண்டான், எருமை மிதித்த சேறுபோலாகி விட்டது அவன் மனம். "பகலவனைக்கண்டு பங்கஜம் மலரும், அவளை மகிழ்விக்க அருகே இரு. எப்போதும் இரு. பிறகு அவள் உனக்குச் சொந்தம், இது அயன் விதி"

என்றார் மற்றோர் மேதாவி, இது மிகப் பிடித்தமாக இருந்தது கிருஷ்ணனுக்கு. இவைகளை எல்லாம்விட, கிருஷ்ணனைச் செயலிலே இறங்க வைத்தது, வேறோர் விற்பன்னரின் ஏடு. அவர் தீர்மானமாகச் சொன்னார் தமது கைகண்ட முறையை. "இது கைகண்ட முறை, காலம்கண்ட முறை கவி கண்டமுறை, கடவுள் கண்ட முறை" என்று ஆரம்பமாயிற்று அவருடைய நூல்.

"காதலில் வெற்றி! வெற்றியில் காதல்! கேளப்பா, கேள். பசு, பாம்பு, பாலர், புலி முதலியவற்றை அடக்கக் கூடிய வித்தையைக் கூறுகிறேன் கேள். பெண்ணின் பிரேமையைப் பெற வழியென்ன என்று கூறுவதை விட்டு, உம்மை யாரய்யா, புலியையும் பாம்பையும், அடக்கும் வழியைக் கூறச்சொன்னது என்று. கேட்கிறாயா? கேட்பாய்! எனக்குத் தெரியும் நீ கேட்பாய் என்று. அட பைத்தியக்காரா! புலியையே, பாம்பையே குத்த வரும் காளையையே, மயக்கி அடக்க நான் மார்க்கம் கூறினால், துடியிடையும், பெடைநடையும், குளிர்மனமும் கூத்தாடும் கண்களும் கொண்ட பெண்களையா அந்த முறையினால் மயக்க முடியாது! யோசித்துப் பார்! இரும்பைப் பிழிய வழி சொல்லுகிறேன், கரும்பைப் பிழிய முடியுமோ இதனால் என்று கேள்வி கேட்பாயோ? புரிந்ததா, இனிக் கேள் முறையை. பாம்பும் புலியும், பசுவும் பாலரும், கொலையாளியும் மதயானையும், இசையினால் கட்டுப்பட்டு விடும், அடங்கிவிடும், அடிபணியும், அன்பு காட்டும்; இலக்கியங்கள் சான்று பகரும், வரலாறுகளைப்படி, இன்றும் காணலாம், இசையில் இனிமையால் காதலிலேவெற்றி கண்டவர்களை, இசையைப் பயின்றாய் இன்பவல்லியை வென்றாய் என்று உலகு கூறும். இசைவாணனாகிவிடு. அம்முறையிலும் சிறந்தது குழல்! யாழ் அதைவிடச் சிறந்தது. சற்று சிரமம், குழலைக் கையிலே எடு. கருங்குழலியரைக் காணிக்கை பெறு என்று கூறுவேன். கண்ணன்மேல் ஆணையிட்டுக் கூறுகிறேன். என் அப்பன் சாமள வர்ணன் அந்தக் குழலின் உதவியினால், கோகுல மணிகளை, கோபிகா ரத்தினங்களை,

மயக்கி மகிழ்வித்து, மகிழ்ந்து, நம்மையும் மகிழ்விக்கிறான்றோ! குழல் இல்லையேல், கோபிகா ஸ்திரீகளுடன் கண்ணனின் காதற்களியாட்டங்கள் இல்லை. அந்த ஆட்டம் இல்லையேல், கண்ணன் இல்லை, கண்ணன் இல்லையேல் கீதை யில்லை, கீதையில்லையேல் நமது மதம் இல்லை, நமது மதம் இல்லையேல், நாம் இல்லை!'' என்று முடித்தார் அந்த மூதறிஞர். கிருஷ்ணன் செயலில் இறங்கினான், குழலை எடுத்தான், பலருடைய செவிகளுக்குக் குடைச்சல் நோயைத் தந்தான். ஜெமீன்தார் வீட்டுப்பெண்ணை வீழ்த்த வேண்டுமென்ற விரதத்தைக் கொண்டான், சரிகமபதனியை ஓய்வின்றி ஊதினான். வர்ணம், கீர்த்தனம் எனும் கட்டங்களை விரைவாகத் தாண்டினான், நாதம் ஜிலுஜிலுப்பாக இருக்கிறதென்பதற்காக கச்சேரி சான்சு வரத் தொடங்கிற்று. சில பஜனைக்கோயில்களில், போயிருந்தால் கிடைத்திருக்கக்கூடிய கடலை தேங்காய்மூடி கழுத்துப் பூச்சரம் ஆகியவற்றைத் தியாகம் செய்தான். குழலில் போதுமான பயிற்சி கிடைத்தது என்று தைரியம் பிறந்ததும் ஜெமீன் வீட்டு மந்தை மன்னனானான், மாடுகளை மயக்கப் பழக்கினான், மாதும் மயங்கினதாகத்தான் கருதினான்.

கிருஷ்ணனின் குழல் லீலாவுக்குக் களிப்பூட்டிற்று காதலை ஊட்டவில்லை, கல்லூரிப் படிப்பை முடித்தானதும், லீலா தனது காதல் நினைவுகளைத் தூக்கி எறிந்தாள். சாயம்போன சேலையைப் பழைய பிரேமைக்காக எந்தப் பெண் அணிந்து கொள்வாள்.

இன்று கேட்போம், நாளை கேட்போம், என்று ஏங்கிக் கிடந்த கிருஷ்ணனிடம் ஒரு நாள், லீலா வலியவந்து பேசலானாள்.

''குழல் வாசிப்பு மிக அருமையாக இருக்கிறது'' என்றாள் லீலா. உன் குரலின் இனிமையை விடவா, என்று பேசவேண்டும் காதல் விளக்க நூலின்படி. ஆனால் அவன் எண்ணத்தை எடுத்துரைக்க நாவிற்கு துணிவில்லை.

'' இது என்ன பிரமாதம்!'' என்று கூறினான்.

"நான் ஒவ்வொருநாளும் அந்த வேலிப்பக்கம் நின்று கேட்டுக் களிப்பது வழக்கம்" என்று லீலா கூறினாள். "நீதானே, என் நாதத்துக்கே ஜீவன்! என் தீபத்தின் திரியே! வாழ்க்கையின் வழியே! இன்பத்தின் இருப்பிடமே! இருதய பீடத்தின் தேவியே! என்று அர்ச்சிக்கும்படி அவனுடைய ஆசிரியர்கள் — காதல் விளக்க ஏடுகள் — தூண்டின, பயனின்றி.

"தங்கள் குழலின் சக்தியை நான் பரீட்சிக்க விரும்புகிறேன்" என்று லீலா சொல்லிவிட்டு, அவனுடைய பேச்சுக்கு எதிர்பார்த்து நின்றாள். சில விநாடி அவன் பேசவே இல்லை. "இனிமேலா பரீட்சிக்க வேண்டும் என் குழலின சக்தியை. ஜெமீன் இதோ, என் காலடியிலே கிடக்கிறதே, குழலின் சக்திக்குப் பரிட்சை இனியுமா?" என்று எண்ணினான், பூரித்தான்.

"அடுத்த ஊரிலே" என்று ஆரம்பித்தாள் லீலா.

"என்னைவிட அழகாகக் குழல் வாசிப்பவர் இருக்கிறாரா?" என்று பயந்து கேட்டான் கிருஷ்ணன்.

"இல்லை! உங்களுடைய கானத்துக்கு ஈடு எங்கிருக்க முடியும்? நான் உண்மையைச் சொல்லுகிறேன். நீங்கள் மந்தையிலே மாடு மேய்ப்பவராக மாறுவேடத்திலே இருக்கிறீர், மதுசூதனரின் மறு அவதாரம் நீர்" என்றாள் லீலாவின் கரத்திற்குப் பதில் குழல்! அவளுடைய அதரத்திற்குப் பதிலாகக் குழலைத் தன் உதட்டிலே பொருத்தினான், கண்ணே, மணியே, காதல் கொண்டேன் என்று கூறுவதற்குப் பதிலாகக் குழலிலே சாரிபமகரிச நிதனிசாச என்று ஆரம்பித்தான்.

"கொஞ்சம் இதைக் கேளுங்கள்" என்று கூறி ஆரம்பத்திலேயே கானத்தைக் கொலை செய்துவிட்டாள் லீலா.

"அடுத்த ஊரிலே அமிர்தம் என்று ஒரு தாசி இருக்கிறாள். கொஞ்சம் படித்தவள். பெரிய கர்வம் பிடித்தவள். சங்கீதத்திலே மகா புலியாம் அவள். எந்த வித்வானையும் மதிப்பதில்லையாம், அதிலும், குழல் வாசிப்பவர்களைக்

கேவலப்படுத்துகிருளாம். இவ்வளவு இனிமையான குழல் வித்வானை நீர் எப்படியாவது அவளுடைய கர்வத்தை அடக்கவேண்டும். தங்கள் வித்தையின் திறமைக்கு இது ஒரு பிரமாதமான காரியமல்ல. எப்படியாவது அவளை மயக்கி, அவள் வீட்டிலே தங்கிவிடவேண்டும். அவள் தங்களிடம் காதல்கொண்டு கதறவேண்டும். அந்த வெற்றியை எனக்குக் கடிதமூலம் தெரிவிக்கவேண்டும். தங்கள் செலவுக்கு இந்தத் தொகை, நாழியாகிறது, நான் வருகிறேன். ஜெயத்தோடு திரும்பவேண்டும், யோசிக்க வேண்டாம்'' என்று கூறி, ஒரு பணமுடிப்பைக் கிருஷ்ணனிடம் தந்துவிட்டு கடைக்கண்ணுல் அவனைச் சித்திரவதை செய்துவிட்டுச் சென்ருள் அந்த சிங்காரி. மறுக்கவோ நேரமில்லை, மனமுமில்லை. ''உன்னைப் பலரும் புகழக் கேட்டால் அவள் மனம்—அதாவது நீ காதலிலே வெல்ல வேண்டுமென்று நினைக்கிருயே அவளுடைய மனம்—உன்னிடம் வற்ருத, மாருத காதலைச் சொரியும்'' என்று அவன் படித்திருக்கிருன். எனவே தாசி அமிர்தத்தை வெற்றி கொள்ளச் சென்ருன். ஜெமீன் வீட்டு லீலாவே, காதலால் தாக்குண்டபோது, இவள் எம்மாத்திரம் என்ற துணிவு பிறந்தது

* * *

பாரிஸ்டர் நவநீதகிருஷ்ணனின் பிரேமாவதியாக இருந்த அமிர்தம் சங்கீதத்தில் பிரியம் கொண்டவள், வித்வான்களிடம் விசுவாசம் காட்டுபவள், பழய உருப்படிகள், புதிய மெட்டுகள், அபூர்வ இராகங்கள் ஆகியவற்றைக் கேட்டு ரசிப்பது, பாடங் கேட்பது, பாரிஸ்டர் பாதித் தூக்கத்திலே இருக்கும்போது, மஞ்சத்திலே படுத்தபடி மெல்லிய குரலிலே பாடி இன்புறுவது. கச்சேரிகளுக்குப் போகக்கூடாது என்பது பாரிஸ்டரின் கடுமையான உத்திரவு. ரிஜிஸ்டர் கலியாணம் செய்துகொள்ளப் போவதாக அவர் வாக்களித்திருந்தார். புதிதாக ஒரு வித்வான் வந்திருப்பதாகக் கேள்விப்பட்ட அமிர்தம், அவருடைய கச்சேரியைக் கேட்க ஆவலானுள். ஊரிலே, வேறு யாரும் கச்சேரி ஏற்பாடு செய்யாமற்போகவே, பஜனைக்

கோயில் நிர்வாகிக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தாள், கச்சேரி நடந்தது. கேட்டு ரசித்தாள். முடிவில் வித்வானைக் கும்பிட்டு, வீட்டிற்கு அழைத்தாள். அன்று கிருஷ்ணன் சில பழைய உருப்படிகளை வாசித்திருந்தான். கிரஹப் பிரவேசமானதும், கிருஷ்ணன், தன் வித்தையின் திறமையை விளக்குவதிலே கண்ணுங் கருத்துமாக இருந்தான். சில கீர்த்தனைகளைப் பாடம் செய்துகொள்ள விரும்பினாள் அமிர்தம். குழல் இருந்தது, குரல் கிடையாது கிருஷ்ணனுக்கு. எனவே குழலிலே வாசித்துக் காட்டி, அமிர்தம் குரலிலே அதைப் பொருத்திப் பாடிக் காட்டி உருப்படி பாடமாவது சிரமமாகவுமிருந்தது, நாளும் பிடித்தது. பாரிஸ்டருக்கும் கோபம் வளர ஆரம்பித்தது.

"இது யார் அமிர்தா, ஒரு கிராக்! அவன் குழலும் குரலும் மகா வேதனையாக இருக்கே. என்ன, இங்கேயே அவன் குடியேறிவிட்டானா? பாதி ராத்திரியிலே எழுந்து உட்கார்ந்துகொண்டு ஊத ஆரம்பித்து விடுகிறானே. உனக்கு இதெல்லாம் வேடிக்கையாக இருக்கா" என்று ஆரம்பித்தவர் நாளாகவாகச் சுருதியை உயர்த்தினார். இரண்டோர் நாள் அமிர்தத்தின் முதுகிலே பாரிஸ்டர் தாள வரிசையும் பழகினார்!

"அனாவசியமாக வம்பு செய்கிறார். வீணாக சந்தேகம் வைத்துக்கொள்கிறார். வேதனையாக இருக்கிறது" என்று கஷ்டப்பட்டாள் அமிர்தம். சங்கீதத்தின் விளைவாகச் சச்சரவு நடைபெற்றது.

"ஆமாம்! அந்த ஆள் இங்கேதான் இருப்பான். அதை நீங்கள் தடை செய்யக்கூடாது" என்று ஒரு நாள் அமிர்தம் துணிந்து கூறினாள், பாரிஸ்டரின் சுபாவத்தைத் தெரிந்துகொள்ளாமல். பாரிஸ்டர் நவநீத கிருஷ்ணன் கோபமாகப் போய்விட்டார்.

* * *

பாரிஸ்டர் நவநீத கிருஷ்ணன், லீலாவின் மாமன், சித்ர்புரிச் சீமான் சிவந்தபாதத்திற்கு இரண்டு மக்கள்.

ஒருவர் நவநீதகிருஷ்ணன், மற்ருென்று கற்பகம். கற்பகத்தின் ஒரே மகள்தான் லீலா. அமிர்தத்தைக் கண்டு சொக்கிய பாரிஸ்டர், லீலாவைக் கலியாணம் செய்து கொள்ளும்படி தன் தமக்கை கற்பகம் வேண்டிக்கொண்டதை நிராகரித்துவிட்டவன். அவ்வளவு பிரேமை கொண்டிருந்தான் அமிர்தத்திடம். அமிர்தத்திடம் கோபித்துக் கொண்டு சித்ரபுரி சென்று சோகத்திலே மூழ்கிய பாரிஸ்டருக்கு ஒரு கடிதம் கிடைத்தது.

சென்றேன்! கண்டேன்! வென்றேன்!! குழல் இனிது! அதன் மகிமை பெரிது! அமிர்தம் இப்போது என் அடிமை. நான் இல்லாவிட்டால் அமிர்தம் இல்லை! இது சத்தியம், பணத்தை வாரி வாரி வீசி, அவளை ஒரு இராணி போல வைத்திருந்த பாரிஸ்டர் நவநீத கிருஷ்ணன் பிடித்தான் ஓட்டம். நான் இங்கே இருக்கக்கூடாது என்று உத்தரவிட்டான், நடக்குமா? மோகனத்திலே ஒரு கிருதி, பந்துவராளியிலே ஒரு பதம் வாசித்தேன், அமிர்தம், "அவரை அனுப்ப முடியாது" என்று பாரிஸ்டரின் முகத்திலே அறைந்தாள், நீட்டினான் கம்பி. காதலால் கட்டுண்டு கிடக்கிறாள் கர்வத்தைக் கண்டாங்கியாகக் கொண்டிருந்த அமிர்தம்.

இப்படிக்கு,
குழலால் காதலில் வெற்றிகண்ட கிருஷ்ணன்.

* * *

இக்கடிதத்துடன் மற்ருேர் கடிதம் இணைக்கப்பட்டிருந்தது.

அன்புள்ள நவநீத்!


என் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேவலம் ஒரு குழலூதியினுல் உங்கள் இன்ப வாழ்வு (???) கெட்டுவிட்டதற்காக வெட்கப்படுகிறேன். என்ன செய்வது? அவன் தங்களை அவள் வீட்டிலிருந்து விரட்டிவிட்ட பெருமையை இங்கே ஒருவனுக்குக் கடிதம்

எழுதினுன். அது வெளியாகாதிருக்கக் கொஞ்சம் சிரமப் பட்டேன். அது என் கடமை. அவன் அதுபற்றி இங்கு கடிதம் எழுதுவானேன் என்று யோசிக்கலாம். உமது உள்ளத்தைக் கொள்ளைகொண்ட கள்ளியின் வீட்டிலே தங்கத் தோற்கடித்தவன் வேறு யாருமல்ல, இங்கே எங்கள் ஜெமீனில் மந்தை மேய்த்துத் திரிந்த கிருஷ்ணன் என்பவன் தான்.

இப்படிக்கு,
லீலா.

* * *

பாரிஸ்டர் நவநீதகிருஷ்ணன் வெட்கமடைந்தான். உண்மையில் துக்கமும கொண்டான். அக்காவுக்குத் தூதுக் கடிதம் அனுப்பினுன். மறு திங்கள், பாரிஸ்டர் நவநீதகிருஷ்ணனுக்கும் லீலாவுக்கும் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. கலியாண விஷயம் வெளியானதும் உன்னுல் அவரை இழந்தேன் என்று கூறி அமிர்தம் கிருஷ்ணனை விரட்டினுள் குழலால் மதியிழந் தேன் என்று கூறிக் குளறினுன் கிருஷ்ணன் குழல் என்ன செய்யும்? இவனுடைய மதி குறைந்ததற்கு அதுவா காரணம்!






வள்ளியின் 'ஆலோலம்' அந்தக் காட்டுக்கே ஓர் கீதம்; பறவைகள் அதைக் கேட்டு இன்புறவே தினைப் புனம் வரும். கதிர்களைக் கொத்துவதுபோல் பாசாங்கு செய்யும். வள்ளி, கவணை வீசிச் சோ! சோ! என்று பாட்டிசைத்ததும், பறவைகள் தம்மை மறந்து, மரக்கிளைகளிலே அமர்ந்து இன்புறும். கீதம் நின்றால், 'ஒன்ஸ் மோர்' கேட்பதுபோல், மீண்டும் தினையைத் தின்ன வரும்! மீண்டும் வள்ளியின் சங்கீத வாய்மொழி ஆரம்பமாகும். வேட்டையாடச் செல்லும் வீரர்கள், கொஞ்ச நேரம் வள்ளியின் விருந்தை அனுபவித்து விட்டுத்தான் போவார்கள்.

வரகவி சோமசுந்தரர், வள்ளி கலியாண காலட்சேபத்திலே மகா திறமைசாலி! வள்ளி, அன்று எண்ணாதனவெல்லாம் இவர் கூறுவார். வேலன் அன்று பேசாததை இவர் செப்புவார். பாட்டும் சுவையாக இருக்கும். மக்கள் அவருடைய காலட்சேபத்தைக் கேட்டு மிக மகிழ்வர். அன்று அவர், ஆறுமுகம் பிள்ளையின் வீட்டிலே நடந்த திருமணத்திலே, வள்ளி கலியாணத்தை விமரிசையாக நடத்திக்கொண்டிருக்கையிலே, வள்ளி எனும் ஓர் வனிதை, —குறக் குலம் பெண்ணல்ல, பிள்ளைவாள் வீட்டு பந்து,— கேட்டு இன்புற்றாள். பிறகு தாகவிடாய் தீர்ந்ததடி

தத்தையே! என் மோக விடாய் தீர்க்காயோ தத்தையே! என்று விருத்த வேலர் கேட்ட பகுதியும், அவர் ஆணை வைத்த பகுதியும், பின்னர் மணந்ததுமாகிய பகுதிகளைக் காலட்சேபக்காரர் மிக ரசமாகக் கூறினார். வள்ளி அதனைக் கேட்டுக் களித்தாள். விடியற்காலை மூன்று மணிவரையிலே தூக்கம் வராமல் வீட்டின் மூன்றாவது கட்டிலிலே, படுத்துப் புரண்டுகொண்டிருந்தாள். காலட்சேபக்காரரின் குறட்டை சங்கீதமாகவும், கொசுவை விரட்ட அவர் தட்டிக்கொண்டிருந்த சத்தம் தாளமாகவும் இருந்தது. மற்றவர்களும் உறங்கிக் கொண்டிருந்தனர். வள்ளியின் கண் மூடவில்லை, கருத்தும் தூங்க மறுத்தது.

"வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கன் சொன்னாலும்"

என்ற கிளிக்கண்ணியை எவ்வளவு அருமையாகப் பாடினார், கிழவர் நடப்பதை எப்படித் தள்ளாடித் தள்ளாடி நடந்து காட்டினார் என்று காலட்சேபக்காரரின் திறமைகளை வியந்தவண்ணம் வள்ளி, புரண்டு கொண்டிருந்தாள். காலடிச் சத்தம் கேட்டது திடுக்கிட்டு யார் என்று பார்க்க, காலையிலே மணமான மாப்பிள்ளை நிற்கக் கண்டு, கண்களை இறுக மூடிக்கொண்டு தூங்குவதுபோல் பாசாங்கு செய்தாள். மாப்பிள்ளை 'வள்ளித் திருமணம்' நடக்கும் போதே வள்ளியைத்தான் பார்த்துக்கொண்டே இருந்தான். நெடுநாட்களாகவே வள்ளியை அவன் உள்ளத்திலே வைத்துக்கொண்டிருந்தான். அவனுக்குத்தான் இந்த வள்ளியைக் கட்டுவதாக, ஆறுமுகம் பிள்ளை முதலிலே நினைத்தார். ஆனால் வள்ளி, ஏழை வீட்டுப் பெண் மூன்றாவது கட்டு, பெரிய இடமாகக் கிடைக்கவே மாப்பிள்ளையின் தகப்பனார், வள்ளி திருமணத்திற்கு ஒப்பவில்லை. சாவித்திரி கலியாணம் நடந்தது. சகல சம்பத்துகளுடனும் சாவித்திரி, அன்று காலையில், சிங்காரவேலனைத் திருமணம் செய்துகொண்டாள். அன்று இரவே வேலன், வள்ளியைத் தேடிக்கொண்டு, மூன்றாவது கட்டுக்கு வந்து நின்றான். அங்கு படுத்திருந்தவர்களைச் சாடையாகப்

பார்த்தான். வள்ளி தெரிந்தாள். மெள்ளக் கால்மாட்டுப் பக்கமாக நின்று, சுற்று முற்றும் பார்த்துக்கொண்டே, கால் விரலை மிதித்தான். வள்ளிக்கு உடல் ஜில்லென்றாகி விட்டது, பயத்தால். காலை இழுத்துக்கொண்டாள். அந்த வேகத்திலே வேலன் கீழே இடறினான். சத்தம் கேட்டுப் படுத்துக் கொண்டிருந்தவர்களிலே யாரோ விழித்துக் கொண்டு, என்ன சத்தம்? என்று கேட்க சமையற்கட்டுக்குள் சந்தடியின்றிச் சென்றுவிட்டான் மாப்பிள்ளை. வள்ளிக்கு அடக்க முடியாத சிரிப்பு! "எதுவோ பூனை வந்தது, துரத்தினேன்" என்று கூறிவிட்டாள். விழித்தவர் மீண்டும் குறட்டை விட்டனர். "இவ்வளவு ஆசை என் மீது வைத்திருப்பவன் எவனோ பணத்தோடு வரவே அவளைப் பந்தலிலே பத்துப்பேர் முன்னிலையில் தாலி கட்டி விட்டு, விடியற்காலை என் விரலை மிதித்து வாடி என்று அழைக்கின்றான். எவ்வளவு சூது, "அக்ரமம்" என்று வள்ளிக்குக் கோபம் வாயைத் திறக்க முடியுமா, பாபம்! காலையிலே கலியாணமானவன், இந்தக் கதியிலே காணப்பட்டால், கலியாணத்திற்கு வந்தவர்கள் கை கொட்டிச் சிரித்து, ஊர்கூட்டிச் சொல்லிவிட மாட்டார்களா! நம்மால் அவருக்கு ஏன் தொல்லை வரவேண்டும் என்று அம்மங்கையின் தூய உள்ளம் நினைத்தது. உள்ளே நுழைந்த மாப்பிள்ளையின் மனம் துடித்தது வெளியே வருவதும், தூங்குபவர் கைச்சத்தமோ, கால் சத்தமோ கேட்டால், உள்ளே போய்ப் பதுங்குவதுமாக இருந்தான். என்ன முட்டாள் தனமாக செய்துவிட்டோம் என்று துக்கித்தான். வள்ளி அதே நேரத்தில் தும்மினாள். அவள் விழித்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்ததும், பயம் போய்விட்டது. 'அந்த எண்ணம்' மேலிட்டது. "வள்ளி!" என்று மெள்ள அழைத்தான். அவளருகே சென்று. படுத்திருந்தவள் எழுந்து "ஏன்? யார்?" என்று கொஞ்சம் உரத்த குரலிலே கேட்டாள். "மெதுவாகப் பேசு வள்ளி! ஒன்றுமில்லை. ஒரு விஷயம். தனியே இப்படி வாயேன்."

"ஊஹும். இதென்ன அக்ரமம்? நான் மாட்டேன்."

"சீ! நான் என்ன உன்னை ஏதாவது செய்து விடுவேன் என்று பயமா? அதெல்லாம் இல்லை. இங்கே வாயேன்."

பேச்சை வளர்த்திக்கொண்டே இருந்தால், தூங்குபவர் விழித்துக்கொண்டு தன்னைத் திட்டுவார்கள் என்று அந்த ஏழைப் பெண் பயந்தாள். மெள்ள எழுந்து, தோட்டத்துப் பக்கம் சென்றாள். வேலன் பின் தொடர தோட்டத்தருகே வந்ததும்,

"இதோ, பாருங்கோ! யாராவது விழித்துக்கொண்டால், என் கதி என்ன ஆவது? கன்னி கழியாத பெண்ணுக்கு இந்த நேரத்திலே ஆண் பிள்ளையுடன், அதிலும் காலையிலே கலியாணமானவனுடன் என்னடி பேச்சு, என்று என்னை ஏசுவார்கள். போய்ப் பேசாமல் படுத்துத் தூங்குங்கள். இவ்வளவு ஆசை என்மீது இருக்கிறவர் தானா, அந்தத் தேய்ந்துபோன சிறுக்கியைத் தேடிக் கட்டிக்கிட்டீர், ஏன், மணை ஏற அவள், மஞ்சத்துக்கு நானா? நாங்கள் ஏழைகளானாலும், மானத்துக்கு அஞ்சினவங்கோ, மகாராஜா! நாம் குழந்தைகளா இருந்ததிலிருந்து சேர்ந்து விளையாடினோம். போதும் போங்கள் நானல்ல, மசிபவள்."

"வள்ளி! நான் கெட்ட நினைப்புடன் வந்தேனென்றா எண்ணுகிறாய்?"

"தொட்டுக்கிட்டுப் பேசாதிங்க. தூரமா நில்லுங்க. நான் கூவி வீட்டை கலக்கிடுவேன்."

"வள்ளி! நான் வந்தது, அதற்கெல்லாம் அல்ல. உண்மையாக, சத்தியமாக, அப்படிப்பட்டவனா?"

"ஒரு பெண்ணுக்காக, ஆண் எத்தனை பொய் சத்தியமும் செய்வான் என்று பாகவதர் இராத்திரி சொன்னாரே, நான் கேட்டேன்."

மீண்டுமோர் காலடிச் சத்தம் கேட்டது. வள்ளி கைகளைப் பிசைந்துகொண்டு, "ஐயோ! என் மானம் போகுமே!

நீ போயேன் எங்காவது தொலைந்து, யாரோ வருகிறுர்களே " என்றுள்.

வேலன், பாய்ந்து சென்று, அங்கிருந்த பெரிய மரத்தின் பின்புறம் மறைந்துகொண்டான்.

வந்தது, வள்ளியின் அத்தை. மகா கைக்காரி. வள்ளியும் வேலனும் தோட்டத்துப் பக்கம் புகுந்ததைத்தெரிந்து கொண்டே வந்தாள். அவளுக்கு ஓர் மகன். அவனைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேனென்று வள்ளி ஒரே பிடிவாதமாக இருந்தாள். அதனுல், வள்ளிமீது வேதத்துக்குக் கோபம் பழி தீர்க்கச் சமயம் கிடைத்தது என்று எண்ணி, தொலையில் வரும்போதே, " ஏண்டிம்மா வள்ளி! பத்தினி! உன் யோக்யதை இதுதானு" என்று அடித்துப் பேசினுள்

" என்ன அத்தை என்னென்னமோ பேசறீங்க, வயித்தை வலிச்சுதுன்னு தோட்டத்துக்கு வந்தேன்; விபரீதமா அர்த்தம் செய்துகொண்டு பேசறிங்க."

" துணைக்கு வந்தானு வேலன்!"

" அவரு எங்கே வந்தாரு?"

" வந்துதான். அதோ மாமரமா மாறி நிற்கிறுனே! வாடா, அப்பா! வேலு; காலட்சேபம் கேட்டானே இராத்திரி, முருகன் வேங்கை மரமானுன்னு, இவன் மாமரமாயிட்டான்."

" ஐயோ! அத்தை சத்தியமா சொல்கிறேன், நான் வரச்சொல்லலெ, இவரே வந்தாரு, காலை மெதிச்சாரு, இந்தக் கோலத்துக்கு என்னைக் கொண்டுவந்தாரு."

" இல்லை, நான் கேக்கறேன், இந்த நேரத்திலே, உங்க ரெண்டு பேரையும் தனியாக இங்கே கண்டா என்ன எண்ணுவாங்க. ஏண்டி வள்ளி! விலையாகிற பண்டமாச்சே நீ விஷயம் தெரிஞ்சா, எவண்டி உன்னைக் கட்டிக்கொள்வான்? இதோ போய், வீட்டிலே எல்லோரையும் எழுப்பி இங்கே கொண்டுவந்து உங்க ரெண்டுபேர் மானத்தையும் வாங்குகிறேன்."

"அத்தே! உன் காலைக் கும்பிடுகிறேன். எங்க பாட்டி வந்தா என்னைப் பிணமாக்கிடுவாங்க. காரி உமிழ்வார்களே. நான் ஒரு பாபமும் அறியேன். அடபாவி உன்னாலே இந்த தீம்பு வந்ததே!"

"அவனை ஏண்டி சபிக்கிறே! உனக்கு எங்க போச்சு புத்தி?"

"என்னைக் காப்பாத்துங்கோ அத்தே! உங்க காலிலே விழறேன்."

"சரி! நான் சொல்றபடி கேட்பதாகச் சத்தியம் செய்! கை போட்டுக் கொடு!"

"சத்தியமா, உங்க பேச்சைக் கேட்டு நடக்கிறேன். மாரியாயி சாட்சியா!"

"சரி! நான் இங்கே கண்டதை ஒருவரிடமும் சொல்லவில்லை, என் மகனைக் கட்டிக்கொள்ள வேண்டும்."

"பழனியையா? நான் மாட்டேன்."

"சத்தியத்தை மறந்தா சாப்பிட மண்கூடக் கிடைக்காது; மாரிமேல் சத்தியம் செய்ததை மறந்துடாதே,"

"ஐயோ! இது என்ன கஷ்ட காலம், நான் என்ன செய்வேன்?"

"சத்தியத்தின்படி நடக்கிறயா, இல்லையானா வீட்டிலே இருப்பவர்களைக் கூப்பிடவா?"

"கூப்பிடாதிங்க. பழனியைக் கட்டிக்கொள்கிறேன். சத்தியமாகதான்."

"இப்ப சரி! வேலா! இன்னம் எவ்வளவு நாழி தாண்டா, மரத்தின் பின்னாலே இருக்கப்போறே?"

வள்ளியை மிரட்டி தனக்கு இணங்க வைத்த அத்தை மரத்தின் மறைவிலே போய்ப் பார்க்க, அங்கு, வேலன் இல்லாதது கண்டு திடுக்கிட்டாள்.

"வள்ளி! இதென்னடி மாயம்! மரத்துக்குப் பின்னாலே போனவனைக் காணுமே" என்று அத்தை கேட்க, வள்ளியும் தேடிப் பார்த்துத் திகைத்தாள். இவர்கள் பேசிக் கொண்டிருப்பதற்குள், மரத்தின் கிளையிலே ஏறி, பக்கத்துத் தெருப்பக்கமாகக் குதித்து, அந்தத் தெருவைத் தாண்டி, கலியாண வீட்டுக்கு வந்துசேர்ந்த சிங்கார வேலன், பாகவதரின் பக்கத்திலே பரம சாது போல் படுத்துக்கொண்டான்.

"எங்கோ போய்விட்டான், கிடக்கட்டும். போய்ப்படு உள்ளே. சத்தியத்தின்படி அடுத்த மாசம் பழனிக்கும் உனக்கும் கலியாணம் தெரிஞ்சுதா. பாட்டி வேண்டான்னு சொன்னாக்கூட நான் பழனியைத்தான் கட்டிக்கொள்வே னென்று சொல்லணும் தெரியுமா? போ உள்ளே, படுத்துத் தூங்கு."

"அத்தே! அவரு கூத்தாடுகிற வேலையை விட்டுட்டாப் போதும். அதிலேயும் பொம்பளை வேஷம் போடுகிறாரே அதுதான் கூடாது."


"ஆகட்டும், சொல்றேன். ஆனால், அவன் பொம்பளை வேஷம் போட்டா, பேச்சு நடை இவ்வளவும் அசல் பொம் பளை போலவே இருக்கும்."

வள்ளி சிரித்துவிட்டு, வீட்டுக்குள்போய், பழையபடி படுத்துக்கொண்டாள், ஆளையைக் காட்டி அவன் கலி யாணத்தை முடித்துக்கொண்டான். அத்தை நமது அசட் டுத்தனத்தைக் கண்டு நம்மை மருமகளாக்கிக்கொண்டாள் என்று எண்ணினாள்; வள்ளிக்குச் சிரிப்பும் வந்தது. தூங்கும்போதுகூட புன்னகை தவழ்ந்தது.

தோட்டத்திலே, அத்தை, டோப்பா சேலை முதலிய வேஷங்களைக் கலைத்து, பழனியானுன், "ஸ்திரீ பார்ட்டிலே திறமை இல்லையானால், நமது தாயாராகவே நடித்து வள்ளியிடம் சத்தியம் வாங்கியிருக்க முடியுமா" என்று

பூரித்தான். உள்ளே தூங்கிய வள்ளி மட்டும், விளக்கெடுத்துக் கொண்டு படுத்திருந்தவர்களை பார்த்திருந்தால், உண்மையான அத்தை உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டிருக்கலாம்! அவள் சத்தியம் செய்தாகிவிட்டது; இனி பழனியே கணவன் என்று தூங்கிக்கொண்டிருந்தாள்.

பொழுது விடிந்ததும், மாப்பிள்ளை வள்ளியின் முகத்தைக் கண்டு வெட்கமடைந்தான். பழனியின் முகத்தைக் கண்டு வள்ளி நாண மடைந்தாள். அந்த பந்தலிலேயே, வள்ளி திருமணத்துக்கு நிச்சய தாம்பூலம் மாற்றிக் கொள்ளப்பட்டது, பழனி தன் தாயாரிடம் நாடகம் பலித்ததைக் கூறினன். மறுமாதம் வள்ளி கலியாணம் நடந்தது.






“பாமா மிகப்பொல்லாதவள்! படித்த பெண்! ஆகவே, அம்மா எதைச் சொன்னாலும் குற்றங் கண்டுபிடிக்கிறாள்” என்று அந்த ஊர் குளத்தங்கரையில் குப்பம்மாள் கூறினாள்.

“ஆனால், பாமா, நல்ல அழகு! தங்கப் பதுமை போன்றவள்! தாய்க்கு ஒரே மகள்! தகப்பனுமில்லை பாபம்! அவர்கள் சொத்தைப் பார்த்துக்கொள்ள, பாமாவிற்குப் புருஷன் எந்தச் சீமையிலிருந்து வருவானோ தெரியவில்லை” என்றாள் அன்னம்மாள்.

“பாமாவின் கண்களைப் பார்க்கும்போதெல்லாம் எனக்கு, சினிமாவிலே, யாரது, அந்த தேவிகா ராணியோ என்னமோ பேர் சொல்கிறார்களே, அதே கவனம் வருகிறதடி” என்றாள் குப்பம்மாள்.

“என்றைக்காவது பாமா, குளத்துக்கு வந்தால், எனக்கு, ஒரு பாட்டு கவனத்துக்கு வருவதுண்டு” என்றாள் சொர்ணம்.

“அது என்ன பாட்டடியம்மா, கொஞ்சம் சொல்லேன்” என்று எல்லோருமாகக் கேட்டனர்.

சொர்ணம் “தாமரை பூத்த குளத்தினிலே முகத் தாமரை தோன்றிட வந்தனளே!” என்று பாட ஆரம்பித்தாள்.

"பாட்டைப் பார்த்தியா, ரொம்ப ருசியா இருக்கிறதே" என்றனர் யாவரும்.

"ஆமாம். சீக்கிரம் வீடு போனால்தான் வீட்டிலே சாப்பாடு ருசியாக இருக்கும், எடுங்கள் குடத்தை போவோம்! பாமா பேச்சைப் பேசுவதென்றால் பொழுது போவதே தெரியாது" என்று அன்னம் கூறிட, எல்லோருமாகக் குடங்களை எடுத்துக்கொண்டு வீட்டிற்குச் சென்றனர்.

உள்ளபடியே பாமாவின் பேச்சை யார் பேச ஆரம்பித்தாலும், அன்னம் கூறியபடி பொழுது போவதே தெரியாது.

நடுத்தர உயரம்! கண் கவரும் சிவப்பு! காதுவரை நீண்டு செவ்வரி படர்ந்த சிங்காரக்கண்கள்! கன்னங்கள், கண்ணாடி! புருவங்களோ, மதனன் வில்லே யென்னலாம்! கொவ்வை இதழ்! அக்கோமளவல்லிக்கு முத்துப்பற்கள்! அவை எப்போதோ சில சமயங்களே வெளியே தெரிந்து காண்போரை மயக்கிவிட்டு, மாயமாக மறைந்துவிடும்!

இன்பத்தின் உருவம்! இயற்கையின் சித்திரம்! ஆனந்த ஒளி! என்றெல்லாம் பாமாவைப் பற்றிப் பேசிப் புகழாதவர்களே இல்லை எனலாம்.

அந்த சிற்றூருக்கு, பாமாதான் தாஜ்மகால்.

அவர்கள் குடும்பத்தின் கோகினூர் பாமாவே. பாமாவிற்கு வயது 18 இருக்கும். தகப்பனார் பாமா சிறு பெண்ணாக இருக்கும்போதே இறந்துவிட்டார். தாய் பாமாவைக் கண்டு கண்டு பூரித்து தன் வாழ்வைத் தள்ளி வந்தாள்.

பாமாவின் அழகு வளர்ந்துகொண்டு வந்தது போலவே, அறிவும் வளர்ந்துகொண்டே வந்தது. அறிவு என்றால், அல்லி அரசாணி மாலையும், நல்லதங்காள் புலம்பலும், அந்தகனை மணந்த அற்புத வள்ளியின் கதையும் படிப்பது என்றல்ல. பகுத்தறிவு!

பாவை பொன்போல இருந்தாள்! அவளுடைய அறிவு வைரம்போல் மின்னிக்கொண்டிருந்தது. தாய் அந்தக் காலத்து நடத்தை, பழங்காலப் பேச்சு பேசிவருவாள்.

மகள், சிறு நகையுடன், "அம்மாவே அம்மா! எங்கள் அம்மா கிரேதா யுகத்திலே பிறந்து வளர்ந்தவர்கள். ஏனம்மா அண்டை வீட்டு அகிலாண்டம், எந்த அரசமரத்தைச் சுற்றினார்கள், எனக்குக் காட்டமாட்டீர்களா? பக்கத்து வீட்டு பாலம்மா, புற்றுக்குப் பால் ஊற்றவே ஒரு மாடு வாங்கலே" என்று கேட்டு கேலிசெய்து சிரிப்பாள், பாமா!

"நீ போடி அம்மா! போக்கிரி. அரசமரம், ஆலமரம் இதெல்லாம் என்ன என்று உனக்கென்னடி தெரியும் பவுடரும், ரிப்பனும் வராத காலத்திலே, வேப்ப மரத்து பெருமை எல்லோருக்கும் தெரிந்துதான் இருந்தது. உங்க அப்பா இருக்கச்சே, இந்த வீடு கோயில்மாதிரி இருக்கும் தெரியுமா! நீ பிறந்துதான் அவரையும் உருட்டிவிட்டே. யாரும் இப்போ இங்கே வரக்கூடப் பயப்படுகிறார்கள். வேலாத்தம்மன் கோயில் பூசாரி, நேத்து நீ தூங்கிக்கொண்டு இருக்கும்போது வந்தான். இளநீர் அபிஷேகம் செய்யணுமாம். அம்மாவுக்கு? என்றான்."

"கொடுத்தனுப்பினாயா? அம்மா, பத்தா ஐந்தா, எவ்வளவு ரூபாயம்மா கொடுத்தாய்?" என்பாள் பாமா.

"பாமா பொல்லாத பெண். அது என்னென்னமோ புத்தகம் படித்துவிட்டு, எதுக்குப் பார்த்தாலும் காரணம் கேட்கிறாள்" என்று பாமாவின் தாயார், புரோகிதர் சுப்பய்யரிடம் சொல்வதுண்டு.

சுப்பய்யர் அந்த ஊர் புரோகிதர். அந்த வட்டாரத்திலே இருந்த எல்லா பணக்காரர் குடும்பத்தையும், அவருடைய பஞ்சாங்கத்தினுள்ளே சுருட்டிமடக்கி வைத்துக் கொண்டிருந்தார். எஸ்டேட் விஷயமுதற்கொண்டு, வீட்டிலே எருமை வாங்குகிற விஷயம் வரையிலே, சுப்பு சாஸ்திரியைக் கலக்காமல் ஒரு காரியமும் நடப்பதில்லை. ஐயருக்கு அவ்வளவு செல்வாக்கு.

காலையிலே குளித்துவிட்டு, விபூதி பூசி, கட்கத்திலே பஞ்சாங்கக் கட்டை வைத்துக்கொண்டு ஐயர் வெளியே

கிளப்பினால் வீடு திரும்பி வரும்போது 12 மணிக்குமேலே ஆகும். மடியிலே இரண்டோ மூன்றோ பணமும் இருக்கும்.

"கமலம்! அடி அம்மா கமலம்! தூங்கிவிட்டாயோ" என்று கதவைத் தட்டுவார். இருபத்தைந்து வயதான அவருடைய ஒரே மகள் — விதவை கொட்டாவி விட்டுக் கொண்டே வந்து கதவைத் திறப்பாள்.

பாமாவைப்பற்றி சிங்காரவேலுப்பிள்ளை கேள்விப்பட்டிருக்கிறார்! பார்த்துமிருக்கிறார். சந்தைப்பேட்டை ஜமீந்தார் சிங்காரவேலருக்கு பாமாவின் பேச்சை எடுத்தாலே, காய கல்பம் சாப்பிட்டதுபோல இருக்கும். எப்படியாவது பாமாவைக் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்பது அவர் எண்ணம். மனைவி வைசூரியால் மாண்டுபோன நாள் முதற்கொண்டு அவர் இதே எண்ணத்தில் இருந்தார். அவருக்கு வேதவல்லி வைப்பு! இருந்தாலும் வேதவல்லிக்கு வயது நாற்பதாகிவிட்டது!

பாமாவைப்போல சின்னஞ்சிறு குட்டி, தனக்கு மனைவியாக இருந்தால், இந்திரலோகத்திலும் இல்லாத ஆனந்தமாக இருக்கலாம் என்று அவர் எண்ணினார். வழக்கப்படி இதைப் புரோகிதரிடமும் சொன்னார்.

"குட்டி ரொம்ப அழகுதான்! ஆனால் பொல்லாத குட்டி. என் தலையைக் கண்டதும் வந்தாரம்மா புரோகிதர், வாழைக்கோ, வெண்டைக்காய்க்கோ" என்று கேலி செய்யும். அவ, அம்மாவுக்கு நல்ல பக்தி. திதி திவசத்தின்போது மனங்குளிர தான தருமம் செய்வாள். நேம, நிஷ்டை தவறுவதில்லை. அவ அம்மாகிட்ட நானும் ஏற்கனவே சொல்லியுமிருக்கிறேன். உம்ம ஜாதகமும் இப்ப நன்னு இருக்கு! உமக்கு ஒரு புதுப்பெண்ணாவது, புது மாடாவது, புது வேஷ்டியாவது இன்னும் கொஞ்ச நாளிலே தானா வந்து சேரணும்" என்று புரோகிதர் சிங்காரவேலருக்கு தேன்மொழி கூறிவந்தார்.

"சாமி அந்த அம்பிகையை நான் இந்த ஐம்பது வருஷமா மறந்ததில்லை, கும்பாபிஷேகம் ஒரு தடவைகூட செய்

யாது விட்டதுமில்லை பார்ப்போம் அம்பிகையின் அருள் எட்படி இருக்குமென்று" என்பார்.

"நாளைக்கு நானும் உம்மபேருக்கு ஒரு இலட்சார்ச்சனை செய்யறதுன்னு நினைச்சுண்டே இருந்தேன்" என்பார் புரோகிதர்.

கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டு, 'ஐயருக்கு வேண்டியதைக் கொடு" என்று சிங்காரவேலு பிள்ளை கூறிவிட்டு நல்ல மயிர் கறுக்கும் தைலம் எங்கு விற்கிறது என்ற ஆராய்ச்சியிலே இருப்பார்.

எப்படியாவது இந்த இரண்டு குடும்பங்களையும் பிணைத்துவிட்டால் தன்பாடு கொண்டாட்டம் என்பது, சாஸ்திரிகளின் எண்ணம். இரண்டு குடும்பத்திற்கும் ஏஜண்டாகவல்லவோ அவர் இருப்பார்!

ஒருநாள் மாலை சாஸ்திரியார் பாமாவின் தாயாருக்கு தூபம் போட்டுக்கொண்டிருந்தார். ஜாதகப்பலனைப்பற்றி சரமாரியாகக் கூறிக்கொண்டிருக்கையில், பொல்லாதபாமா வந்துவிட்டாள் அங்கே. "உமது ஜாதகக் கணிதத்தில் கமலா கலியாணமான இரண்டாம் மாதம் தாலி அறுப்பாள் என்பது தெரியாமல் போனதே" என்று இடித்தாள். சாஸ்திரிகள் பச்சைச் சிரிப்புடன், "விதிவசம் அம்மா, ஆண்டவன் கூற்று" என்றார். "உமது மகளுக்கு நடக்க விருந்த விபத்தையே உம்மால் கண்டுபிடிக்க முடியாத போது, என் ஜாதகப் பலனைப் பார்த்துச் சொல்ல வந்து விட்டீரே" என்று குத்தலாகக் கூறினாள் மங்கை.

"என்னமோ நடந்தது நடந்துவிட்டது, என் மகள் காலம் இப்போது ஏதோ, ஆண்டவனைத் துதித்துக் கொண்டு, சிவனே என்று காலந் தள்ளுகிறாள். அவளுக்குக் கொடுத்துவைத்தது அவ்வளவுதான்" என்று சற்று வருத்தத்துடன் கூறினார் சாஸ்திரி.

"பாபம் கமலாவைப்பற்றி எண்ணினால் எனக்கு துக்கம் தொண்டையை அடைக்கிறது பெண்ணின் குணத்

திற்கென்ன? ரூபத்திற்குத்தான் என்ன? எலுமிச்சம் பழம் போல இருக்கிறது குழந்தை" என்றாள் பாமாவின் தாய்.

பாமா புன்சிரிப்புடன், "அப்புறம், இன்னம் கொஞ்சம் வர்ணியுங்கள், கமலாவைப்பற்றி, அவள் கண்டது இது தானே" என்றாள்.

"போடி போக்கிரி சிறுக்கி, கமலா எவ்வளவு ஆசார அனுஷ்டானந் தவறாது இருக்கிறாள் பார்! ஒரு நாளாவது சிவன் கோவிலைப் போய் பூஜை செய்யாது இருக்கிறாளா? நீ தான் அந்த சங்கத்திற்குப் போகிறேன், இந்த சேரிக்குப் போகிறேன் என்று குலத்தையே கெடுத்துக்கொண்டு வருகிறாய்" என்றாள்.

"கமலா, என் தோழி! அவள் விஷயத்தில் உங்களுக்கு இருப்பதைவிட எனக்கு அக்கரை அதிகம். நாளை மாலை மூன்று மணிக்கு நான் உங்களுக்கு ஒரு "காட்சி" காட்டப் போகிறேன். சாஸ்திரிவாள், நீர் இரவு முழுவதும் குத்து விளக்கடியில் உட்கார்ந்துகொண்டு உமது பஞ்சாங்கக் கட்டையெல்லாம் புரட்டிப்புரட்டிப் பார்த்தாலும், நாளை என்ன காட்டப்போகிறேன் என்பதைக் கண்டுகொள்ள முடியாது. கமலா, அழகி! கமலா ஒரு யுவதி! கமலா ஒரு விதவை! அவள் என் அருமைத் தோழி! அவளை நீங்கள் முற்றும் தெரிந்துகொள்ளவில்லை, நான் தெரிந்துகொண்டேன். இன்று போய் நாளை வாரும். உமது மனம்முதலில் மருண்டு பிறகு குளிரும் காட்சியைக் காண்பீர்' என்று பாமா கூறிவிட்டு, பெண்கள் முன்னேற்ற சங்கத்திற்குப் போய்விட்டாள்.

* * *

"இதோ பாருங்கள்! 'கப்சிப்' என்று இந்த அறையில் இருக்கவேண்டும். நான் அறையை வெளிப்பக்கம் பூட்டி விடப்போகிறேன்" என்று கூறி பாமா, சாஸ்திரிகளை ஒரு அறையில் பூட்டிவிட்டாள். மறுநாள் மாலை சாஸ்திரிகளுக்குக் கொஞ்சம் பயம், இந்தப் 'போக்கிரிப்பெண், என்ன சூது செய்வாளோ என்று. சிறிது நேரத்திற்குப் பிறகு சிரிக்

கும் சப்தம் கேட்டது. உற்றுக் கேட்டார். ஆம்! சந்தேக மில்லை. தன் மகள் கமலாவின் சிரிப்புதான். இதுவரை கமலா அப்படி சிரித்ததை அவர் கேட்டதில்லை; விதவைக்கு சிரிப்பும் களிப்பும் ஏது?

"கண்ணே பாமா, நான் இன்றே பாக்கியசாலி யானேன். உன்னை நான் என்றும் மறவேன்" என்றாள் கமலம்.

"என்னை மறந்தாலும் மறப்பாய் கமலா! 'எதுகுலகாம் போதியை மறப்பாயோ" என்றாள் பாமா.

"போ, பாமா உனக்கு எப்போதும் கேலி செய்வது தான் வேலை. எங்களவர் 'எதுகுல காம்போதி' ஆலா பனம் செய்வதை ஒரு முறை கேட்ட யார்தான் மறந்து விடுவார்கள்?" என்றாள் கமலா.

"பிளேட்டிலே கொடுத்துவிடச் சொல்லு. அவர்வெளி யிலே போய்விட்டாலும் நீ போட்டுக் கேட்டுக்கொண்டே இருக்கலாம்" என்றாள் பாமா.

பக்கத்து அறையிலே இருந்த சாஸ்திரியாருக்கு ஒன்றுமே விளங்கவில்லை. நட்சத்திர பலன், நாழிகைக் கணக்கு, தர்ப்பையின் மகிமை தெரியுமே தவிர 'எதுகுல காம்போதி என்ன தெரியும் சாஸ்திரியாருக்கு?

என்னடா சனியன், எதுகுல காம்போதி. எங்களவர் கிராமபோன் பிளேட் என்று எதை எதையோ குட்டிகள் பேசுகின்றனவே என்று எண்ணித் திகைத்தார்.

"பாமா! என் விஷயம் எல்லாப் பேப்பரிலுமாபோட்டு விடுவார்கள்?" என்று கேட்டாள் கமலம். "தடையில் லாமல்! 'பலான சாஸ்திரியின் மகள் ஸ்ரீமதி கமலத்திற்கும், சிவன் கோயில் நாதஸ்வர வித்வான் சுப்பிரமணியப் பிள்ளைக்கும் சீர்திருத்த மணம், ஸ்ரீமதி பாமாவின் முயற்சி யால் இனிது நடந்தேறியது. அதில் ஜில்லா முன்சீப் தோழர் கதிரேசன் அவர்கள் தலைமை வகித்தார்' எனக் கொட்டை எழுத்தில் போட்டோவுடன் வெளிவரும்"

என்று பாமா கூறி முடிப்பதற்குள், சாஸ்திரிகள், "அடி பாவி! குடி கெடுத்தாயே! நான் என் செய்வேன், கமலா! என்ன வேலையடி செய்தாய்?" என்று ஓவென அலறினார்.

"ஒன்றுமில்லை! பயப்படாதே கமலா! உங்க அப்பா, சீர்திருத்தத்தைக் கண்டு பயந்து அலறுகிறார். அவ்வளவு தான். கொஞ்சநேரம் சென்று சரியாகிவிடும். சட்டப்படி உன்னை ஒன்றும் செய்ய முடியாது" என்று பாமா கூறினாள்.

பக்கத்து அறையின் கதவை, படீர் படீர் என உதைத்தார் சாஸ்திரிகள், "நாசகாலப் பெண்ணே, திற கதவை. நாதஸ்வரக்காரனைக் கட்டிக்கொண்டாயா? இதற்குத்தானா நாள் தவறாமல் நீ சிவன் கோயிலுக்குப்போனாய்? நாசமாய்ப் போனவளே! எங்காவது குளத்திலே, குட்டையிலே விழுந்து சாகக்கூடாதா? கொண்டு வந்து வைத்தாயே என் குடும்பத்தில் கொள்ளியை" என்று கோவென கதறினார்.

"சாஸ்திரியாரே சாந்தமடையும். எல்லாம் ஆண்டவன் செயல்" என்றாள் பாமா. "போதுமம்மா, உன் பேச்சு. நீ ரொம்ப நல்லவள். பிறந்தாயே இந்த ஊரில் என் குடி கெடுக்க" என்றார் சாஸ்திரியார்.

"ஓய் சாஸ்திரியாரே, உமது மகள் செய்ததில் என்ன தவறு கண்டுவிட்டீர்? அவள் வேறு ஜாதியானை மணந்து கொண்டதற்காக இங்கு மல்லுக்கு நிற்கிறீரே, உமது சங்கதி என்ன? கமலாவுக்குத் தெரியாது — எனக்குமா தெரியாது என்று எண்ணுகிறீர்? எங்கள் சங்கத்து வேவுகாரரிடம் உமது 'ஜாதகம்' அத்தனையும் இருக்கிறது. பேசுவது வேதம், வேதாந்தம்! வேஷமோ சனாதனம், நடத்தை எப்படி? ஏன் சாஸ்திரிகளே! உமது வைப்பாட்டி வள்ளி யார்? எந்த இனம்? சொல்லட்டுமா கமலாவுக்கு!" என்று கோபத்துடன் கேட்டாள் பாமா. சாஸ்திரியார்,

"சிவ! சிவ! சம்போ, மகாதேவா! உனக்கு என்ன அபசாரம் பண்ணினேனோ, என் தலையிலே இப்படி இடி விழுந்ததே" என்று அழுதார்.

"சரி கேளும் மேலும் சில சேதியை; கமலாவும் சுப்பிரமணியமும் இன்றிரவே புறப்பட்டு சென்னை போகிறார்கள். அங்கேதான் குடியிருப்பார்கள். நானும் அடுத்தவாரம் அங்கே போகிறேன்" என்றாள் பாமா.

"ஏண்டி பாமா! இது என்னடி பெரிய வம்பாகிவிட்டது?" என்று கூறிக்கொண்டே, பாமாவின் தாயார், சாஸ்திரியாரை அறையைவிட்டு வெளி ஏற்றினார். கமலாவை திரும்பிக் கூட பார்க்காது, அவர் வீடு சென்றார்.

அன்றிரவே கமலாவும் அவளுடைய காதற் கணவன் சுப்பிரமணியமும் சென்னை சென்றனர்.

பாமா புன்சிரிப்புடன், தாயை நோக்கினாள். "ஏனம்மா! விதவைகளுக்கு மணமுடித்து வைக்கிற திறமை எனக்கு இருக்கும்போது, என்னை ஒரு கிழவனுக்குக் கொடுக்க ஏற்பாடு செய்தாயே" என்று கேலி செய்துவிட்டு "இதோ பாரம்மா! படத்தை. இவரைத்தான் நான் அடுத்த வாரம் மணம் செய்துகொள்ளப்போகிறேன்" என்று கூறிக்கொண்டே, ஒரு 'போட்டோ' வைக்காட்டினாள்.

பாமாவின் தாய் அதைப் பார்த்தாள். படம் ஒரு வசீகரமான இளைஞனுடையது! நாகரீகமான உடை! நல்ல தோற்றம்!


"யாரம்மா இது? என்ன ஜாதி"? என்றாள் தாயார்.

"இவர் தானம்மா எனக்குக் கணவராக வரப்போகிறார், ஜாதி, ஆண் ஜாதி தான். எனக்கு அவ்வளவுதான் தெரியும்" என்று கூறிக்கொண்டே தாயின் கன்னத்தை அன்போடு கிள்ளினாள்.

“நீ செய்வது எனக்கொன்றும் பிடிக்கவேயில்லை. குலத்தைக் கோத்திரத்தை எல்லாம் கெடுக்கிறாய்” என்றாள் தாய்.

“எதைக் கெடுத்தேனும் நான் சந்தோஷமாக இருக்க வேண்டுமென்பது தானே அம்மா உன் ஆசை” என்று கொஞ்சினாள் பாமா.

தாயாரால் ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. “போடி பொல்லாத சிறுக்கி, நீ எப்படியோ சுகமாக இரு! பார்த்து மகிழ்கிறேன் நான்” என்று கூறினாள் தாயார்.





"அன்னம்! வாடி இங்கே, எப்போதும் ஓரே விளை யாட்டுத்தானு? வந்து சாமியைக் கும்பிடடி! கண்ணைத் திறந்து பாரடியம்மா; காமாட்சி என்று சேவிச்சுக்கோ காலையிலே எழுந்ததும், கனகாம்பரமும் கையுமா இருக் கிருய். மாலையிலே மல்லிகைப் பூவுடன் மகிழ்கிருய். இப் படியே இருந்துவிடுமா காலம்? வா, வா, விழுந்து கும்பிடு.

அன்னம், சின்னஞ் சிற்றிடையாள், சேல்விழியாள் சிவந்த மேனியாள், சிரிப்புக்காரி, உலகமே அறியாதவள், தாயம்மாள், அன்னத்தைப் பெற்றவள். வயதானவள். உலகின் மாறுதலைக் கண்டவள், உத்தமர்கள் உலுத்த ரானதையும் கண்டிருக்கிருள்; ஓட்டாண்டிகள் குபேரரான தையும் கண்டாள். தனது ஓரே மகள் அன்னம் அழகுட னிருக்கிறது கண்டு பூரிப்பு, ஆனால் உலகமறியாமல், உண்பதும், உறங்குவதும், உடுப்பதும், ஊர்ப்பேச்சுப் பேசுவதும், பூத்தொடுப்பதும், புத்தகம் படிப்பதுமாகவே காலங்கழிக்கிருளே என்ற கவலை. இதற்காகக் கவலை ஏன்? என்று கேட்கத்தான் உங்கள் மனம் தூண்டும். தாயம்மா ளுக்கல்லவோ தெரியும், அந்தக் குடும்பத்தின் கஷ்டம். நிலத்தை உழுது நீர் பாய்ச்சியவனல்லவா, பயிர் வளரு வது கண்டு பூரித்துக் களை முளைப்பது கண்டு கவலைப் பட்டு, ஏரி வற்றுவது கண்டு வாடி, வானத்தை அண்ணாந்து பார்த்து, 'மகமாயீ! இன்னமும் மழை

இல்லாமே போனா, வயலும் காயும்; என் வயிறும் காயும்; என்று வருத்தத்துடன் கூறுவான். வெறும் வழிப் போக்க னுக்கு என்ன வாட்டம்? போகிற போக்கிலே பயிரை மிதித் துத் துவைத்துக் கொண்டுதான் போவான். அன்னத் தைக் கொண்டு அஷ்டஐஸ்வரியம் அடையவேண்டும் என் பதல்ல, தாயம்மாளின் எண்ணம். வாழ்வதற்கே அந்த ஒரு வழிதான் இருந்தது. அன்னத்தை தான் உயிரோ டிருக்கும்போதே நல்லவனிடம் பிடித்துக் கொடுத்துவிட் டால்தான், அவள் நிம்மதியடைய முடியும். இல்லையானால் அன்னமும் ஆலாகப் பறக்க வேண்டியதுதானே! தாயம் மாள் பட்ட கஷ்டங்களெல்லாம் நினைவுக்கு வந்தன. எத்தனை சண்டைகள், எவ்வளவு பட்டினி, தூற்றல், அப்பப்பா! பகையாளிக்குக்கூட நேரிடக் கூடாது இந்த கஷ்டம் என்று எண்ணினாள் தாயம்மாள்.

பெண் உருவாக இருந்தால் விழுங்கிவிடுவதுபோலத் தான் ஆண்கள் பார்க்கிறார்கள். கொஞ்சும்போதோ, நீயே பூலோக ரம்பை! உன்னையன்றி வேறொருவளைத்தொடேன் என்று சத்தியம் செய்வார்கள். ஆனால் கலியாணம் என் றால் மட்டும், அதற்கு வேறு இடம், அந்தஸ்து, குலம், ஜாதிக்கட்டு, வீட்டுக் கட்டுப்பாடு என்று ஏதேதோ பேசு வார்கள். 'கலியாணம் செய்துகொண்டால் என்ன கண்ணே! நமக்குள் இருக்கும் பிரியம் போய்விடுமா? என்று பேசுவார்கள். விம்மினால், கண் துடைப்பார்கள். அந்த நேரத்திலே நெஞ்சு நெகிழும். பிறகு அவர் வேறு உலகம், இவள் வேறு உலகம். பிளவு, விரிந்துகொண்டே போகும். கலியாணத்துக்கு ஒரு கன்னி, காதலுக்கு வேறோர் கன்னி என்ற முறை ஏற்படும். இந்தக் கோளாறு தாயம்மாளை விபசாரியாக்கிற்று. அன்னம் அதன் விளைவு அன்னத்தையாவது நல்ல கதிக்குக் கொண்டுவரவேண்டு மென்று தாயம்மாள் எண்ணினதிலே தப்பென்ன, பாபம்!

மிராசுதார் வீட்டு மகன் மலையப்பன், தாயம்மாள் வீட்டுக்குத் தாராளமாக வரப்போக இருந்தான். தாயம் மாளின் தகப்பன் பூரித்தான். ஊரார் தாயம்மாளின் தகப்

பனிடம் கொஞ்சம் பயப்படவும் ஆரம்பித்தார்கள். தாயம்மாள் ஏழைக்குடி. ஆனால், அவளுடைய எழில் மலையப்பனை அந்தக் குடிசைக்கு வரவழைத்தது. மலையப்பனின் பெற்றோர்கள், 'பையன் கெட்டுக் கீரை வழியாவதற்குள் ஒரு முடி போட்டுவிடவேண்டும்' என்று முடிவு செய்தனர். அதற்குள் குடிசையிலே மலையப்பன் தாயம்மாளைச் சரிப்படுத்திவிட்டான். அதிகக் கஷ்டங்கூட இல்லை. அவன் தொட்டான். அந்தத் தளிர் சாய்ந்தது. "உன்னைத் தான் கலியாணம் செய்து கொள்ளப்போகிறேன். எங்கப்பாமீது ஆணை" என்று மலையப்பன் கூறினான். அந்தக் குமாரி ஆனந்தமடைந்தாள். அடிவயிற்றிலே அந்த ஆனந்தத்தின் சாட்சி, மெதுவாகத் தவழத் தொடங்கிற்று. அந்தச் செய்தி தெரிந்ததும் மலையப்பன் ஊரைவிட்டே நழுவினான். தாயம்மாளின் தகப்பன் துக்கத்தையும், கோபத்தையும் 'கண்ணீரால் கழுவினான். பயல் மகா பேர்வழி! அவனை எப்படியோ அந்தத் தாய் மயக்கி மடக்கிப் போடப் பார்த்தாள். சிறுபயல் தானே, அவள் கண்ணைக் காட்டினாள்; சொக்கிவிட்டான். எதுவோ நடந்துவிட்டது. இப்போது கடிதம் எழுதியிருக்கிறான் கொடைக்கானலிலிருந்து அந்த குடும்பத்துக்கு ஏதாகிலும் பணம் கொடுத்து ஊரைவிட்டு அனுப்பிவிடுங்கள் என்று, எனவே, மிராசுதார் தன் மகன் திருந்திவிட்டான் என்ற திருப்தியோடு கடிதத்தை அவன் அன்னையிடம் படித்துக் காட்டினார். அந்த அம்மை, "அகிலாண்டேஸ்வரி, மலையப்பனுக்கு இந்த நல்ல புத்தியைக் கொடுத்தாளே" என்று மகிழ்ச்சியோடு பிரார்த்தித்தார்கள். தாயம்மாளின் பிரார்த்தனை என்னவென்று, அந்த அம்மைக்கு என்ன தெரியும்?

கருவுற்ற காரிகை, உடல் மெலிந்து, ஊண் உறக்கமிழந்து, கவலையால் தாக்குண்டு படுக்கையிலேயே புரண்டு தன் நிலையை எண்ணிப் பயந்து, ஊர் தூற்றுவது கேட்டு மிரண்டு என்ன செய்வதென்று தெரியாது வாடி, "மாரி

யாயி" நான் என்ன பாபம் செய்தேன்? என்னை இக்கதிக்கு ஆளாக்கினாயே! அவர் காட்டிய அன்பு என்னை இணங்கவைத்துவிட்டது. அவர் எவ்வளவு பிரியமாக, சத்தியம் செய்து என்னைத் தாலி கட்டுவதாக அவர் அப்பாமீது ஆணையிட்டுச் சொன்னார்! நான் நம்பினேன்! என்னை நட்டாற்றிலே விட்டுப் போய்விட்டாரே! இந்த ஏழையை இந்தப்பாடு படுத்தலாமா? நான் உனக்கு என்ன குறை செய்தேன்? பூஜையிலோ, விரதத்திலோ, பக்தியிலோ நான் தவறவில்லையே! என் தலைமீது இந்தக் கல் விழலாமா" என்று காளியைப் பிரார்த்தித்து கண்ணீர் வடித்தாள். காளிக்கு என்ன இதுதானா வேலை? கண்ணீர் வடிக்கிற பெண்களுக்குக் கருணை காட்டுவது என்ற வேலையிலே காளி ஈடுபட்டால், ஓய்வே கிடைக்காதே! காளியின் அருள் கிடைக்கவுமில்லை, கரு சிதையவுமில்லை. "காளி! ஊரிலே வருகிற காலரா, பிளேக், கடும் ஜுரம் ஏதாவது எனக்கு வரக்கூடாதா! என்னை உன் பாதத்திலே சேர்த்துக்கொள்ளேன்" என்று பிரார்த்தித்தாள் பேதை. காளியின் பாதத்திலே இருக்கும் பிணக்குவியல், அமோகமாயிற்றே இவளுக்கேது இடம். வயிற்றிலே, அன்னம், தாயம்மாளைத் தன் காலால் மெல்ல உதைத்துக்கொண்டிருந்தாள். வயிற்றிலே குழந்தை தவழுது முகத்திலே புன்னகை தரும் மற்றவர்களுக்கு, தாயம்மாளுக்கோ திகிலைத்தானே தரும். மிராசுதார், கொஞ்சம் பணம் கொடுத்து 'இதுகளை' ஊரைவிட்டுத் துரத்திவிடவேண்டும் என்று முதலிலே நினைத்தார். பிறகு யோசித்தார், பணம் தருவானேன்; மிரட்டினால் ஓடாதா என்று அதைப் போலவே செய்தார். வேற்றூரில் சர்க்கார் ஆஸ்பத்திரியில் தான், கலியாணமாகாத தாயம்மாளுக்கு, அழகான பெண் குழந்தை அன்னம் பிறந்தாள். பிறகு பட்ட கஷ்டங்கள் இவ்வளவு அவ்வளவல்ல! எத்தனையோ அவதிகள். எவனெவனோ நாயகர்கள். ஒவ்வொருவனிடம் பழகியபோது ஒவ்வோர் நிலை, நினைப்பு. சுபாவம் அவள் விபசாரியானாள் "அந்தப் படுபாவி என்னை இக்கதிக்கு விட்டுவிட்டான். அவன் தலையிலே இடிவிழ அவன் குடும்பம் அழிய. காளி

அவனுக்குக் கூலி கொடுக்காமல் போவாளா" என்று தாயம்மாள் மிராசுதாரின் மகனைத் திட்டுவாள்; காளியைப் பிரார்த்திப்பாள். அவன் தலையிலே இடியா விழுந்தது! பக்கத்து ஊர் மிராசுதாரின் ஒரே மகளைக் கலியாணம் செய்துகொண்டான். அந்த மிராசும் இவன் தலையிலே விழுந்தது. சர்க்கார் வேறு அவன் தலையிலே ஒரு 'ராவ்பகதூரை' விழ வைத்தனர். கோயில் குருக்கள் அந்தச் சுற்றுப் புரத்திலே, "மலையப்பன் மகா பக்திமானன்றோ," என்று பிரசாரம் செய்தார். எந்தத் திருவிழாவுக்கும் மலையப்பன் பிரசன்னம்! தவறிய தாயம்மாள்போல் வேறு எத்தனையோ தையல்கள் உண்டே, அவர்கள் இந்தத் 'தர்மப்பிரபு'வின் நேசத்தைப் பெறுவார்கள். அந்தச் சமயத்திலே, அந்தக் கோயில் ஐயர்கள், இந்தக் காரியத்துக்கு உளவு, உதவி. இது என்ன கேவலமா என்ன? சாட்சாத் சிவபெருமானே சுந்தரருக்கும் பரவைக்கும் தூது போனாராமே!

தாயம்மாளின் விபசார வாழ்வின் வேதனைகள் கூறவும் முடியாது. கூறினால் என்ன? யார் பரிதாபப்படுவார்கள்? ஒருவரிருவர் விலாசம் விசாரிப்பார்கள்; வேறென்ன நடக்கும்! அன்னம் வளர்ந்து பருவமடைந்தாள். தாயம்மாள் உலகிலே உழன்று அலுத்தாள். ஒரு ஓட்டை வீடு, ஒரு ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகை, உடலிலே பலவகையான ரோகம், உள்ளமோ எரிமலை, இந்நிலையில் இருந்த தாயம்மாள், அன்னத்தை எவனுக்காவது கட்டிக் கொடுத்துவிட வேண்டுமென்று கலியாணத் தரகர்களிடம் கூறினாள். வழக்கப்படி காளியை வேண்டினாள். விபசாரியின் மகளைக் கட்டிக்கொள்ள எவன் சுலபத்திலே இசைவான்? ஆனால், அன்னத்தின் அழகோ அவ்வளவு சுலபத்திலே, 'நான் மாட்டேன்' என்று மறுத்துவிடும்படி ஆண்களைச் கூறச் செய்யாது. தாய் விபசாரியானால் உனக்கென்ன, அன்னத்தின் ஒய்யாரத்தைப் பார்! கொடி போலிருக்கிறாள்! குளிர்ந்த பார்வை! எண்ணத்தைக் கிளறும் இதழ்; முரடரையும் குழந்தை உள்ளம் கொண்டவராக்கிவிடும் பேச்சு; சங்கீதச் சிரிப்பு; அன்னத்துக்கு

என்ன மாசு இருக்கிறது. தாயம்மாள் விபசாரி என்ருல், அது, அவளுடைய வேதனைக்கு ஒரு அத்தாட்சி. அதே வேதனை அன்னத்துக்கு வரவிடாதபடி தடுக்க நீ அவளைக் கலியாணம் செய்துகொள்'' என்று அன்னத்தின் கண்கள் இளம் ஆடவரின் நெஞ்சுக்குக் கூறின. எனவே, சிலர் "ஆமாம், செய்துகொண்டால்தான் என்ன?'' என்று பேசிடவும் தொடங்கினர். "எந்த ஜாதியாக இருப்பினும் சரி, ஏதோ மாதம் இருபது ரூபாய் சம்பாதித்து, என் பெண்ணைக் காப்பாற்றுபவனுக இருந்தால் போதும்'' என்று தாயம்மாள் கூறினுள். தரகர்கள் தம்மாலான வரை முயன்றனர். பெண் பார்க்கச் சிலர் வந்து போயினர் காரியம் முடியவில்லை. அந்தக்கவலைதான் தாயம்மாளுக்கு. அந்தச் சமயம் அவளை நாயகியாகக் கொண்டிருந்தவன் ஒரு கள்ளுக்கடை கண்டிராக்டர். எனவே, அவன் தாயம்மாள் அதிகக் கவலைப்பட்டால், 'கொஞ்சம் போட்டுக் கொள்ளச்' சொல்லுவான். தாயம்மாளுக்கு அந்தப் பழக்கமும் உண்டு.

அன்னத்தின் நெஞ்சம், அசையாமலில்லை. அடிக்கடி அவ்வீதி வழியிலே தன்னைக் காண்பதற்காகவே வரும் ஆறுமுகம் என்ற வாலிபன்மீது அவளுக்கு ஆவல்! அவர்கள் சந்திப்பு, நித்திய நிகழ்ச்சி, வீட்டிலே, உள் வாசலிலே, அன்னம் பூத்தொடுத்துக் கொண்டிருப்பாள், ஆறுமுகம், அந்த வீட்டுக்கு எதிரிலே இருந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்கு வருவான்; வெற்றிலை போட்டுக் கொண்டு நிற்பான். இருவருக்கும் சந்திப்பு! புன்னகை, இருவர் மனமும் மெள்ள மெள்ள ஒன்ருகிக்கொண்டு வந்தது. பேசவில்லை அவர்கள், பேசுவானேன்? அந்தப் பெரும் புலவர் கூறினது பொய்யா? "கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்வாய்ச் சொற்கள் என்ன பயனுமில!'' தாயம்மாள் இரண்டோர் முறை இந்தக் காட்சியைக் கண்டதுமுண்டு. பச்சை சிரிப்பையும், பசப்பு மொழியையும் கண்டு ஏமாந்துதானே நாம் இந்தக் கதிக்கு வந்தோம். அன்னத்தை எவனுவது இதுபோல் கெடுத்துவிடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கருதி, சில தடவைகளிலே கண்டித்தாள்.

"வாசலிலே இருந்தால், தெருக் கதவைச் சாத்தவேண்டாமா, எது எதுகளோ மொட்டையும், கட்டையும், கடையிலே நிற்கிறதே" என்று தாயம்மாள் கூறுவாள். அன்னத்தின் முகம் சுளிக்கும். "பைத்தியக்காரி! உன் நன்மைக்குத்தாண்டி. நான் சிறுசா இருக்கச்சே அந்தக் குடிகெடுப்பான் கொஞ்சி என்னைக் கெடுத்ததாலேதான் நான் இந்தக் கதிக்கு வந்தேன், உலகம் ரொம்ப கெட்டது. பார்த்துப் பிழைக்க வேண்டுமடி" என்று புத்தி கூறினாள். "அவர் மொட்டையுமல்ல, கட்டையுமல்ல" என்று அன்னத்தின் மனம் சொல்லிற்று; வாய் திறக்கத் துணிவில்லை.

சில நாட்களுக்குப் பிறகு, கண்டிராக்டர் ஒரு நண்பருடன், தாயம்மாள் வீட்டுக்கு வந்தார். வருகிறபோதே கொஞ்சம் டிகிரிதான்! கையிலேயும் கொஞ்சம் எடுத்து வந்திருந்தார்.

அவருடைய மனம் கோணும்படி தாயம்மாள் நடக்க முடியுமா? நடந்தால், வாழ்க்கை கோணலாகிவிடுமே? ஆகவே, வருகிறவன் குடித்துக் குளறினால், இவளும் அதுபோலவேதான் செய்வாள். அன்னம் பருவத்துக்கு வந்த பெண், துணையாக இருந்த தாத்தாவும் செத்து விட்டார். எனவே, அன்னத்தைப் பொழுதோடு சாப்பிட்டு விட்டு, ரூமிலே கதவைத் தாள் போட்டுக்கொண்டு படுத்துத் தூங்கச் சொல்லிவிட்டு, கண்டிராக்டர் கொண்டுவந்த ரசங்களைப் பருகுவதிலே ஈடுபட்டாள். போதை மூவருக்கும் ஏறிவிட்டது. பேச்சும், சிரிப்பும், பலமாகி விட்டது. புதிதாக வந்தவன் கைகாரப் பேர்வழி என்பது அவனது பேச்சினாலே தெரிந்தது. வாலிபன், கண்டிராக்டரின் நண்பன். அன்றையச் செலவு அவனுடையது. காரணத்தோடுதான் அத்தச் செலவு செய்தான். காமக் கள்ளன்.

நடுநிசி வரையிலேதான் தாயம்மாளும் கண்டிராக்டரும் குளறிக்கொண்டாவது இருக்கமுடிந்தது. அதற்கு மேல் அவர்கள் சாய்ந்து விட்டனர், மரம்போல்.

வந்த கள்ளன் போதை ஏறியவன்போல் இருந்தானே தவிர, உண்மையிலே கொஞ்சம் சுறுசுறுப்பு வரும் அளவுக்

குத்தான் சாப்பிட்டிருந்தான். இருவரும் சாய்ந்ததும் "வந்த வேலையைக் கவனிப்போம்" என்று கிளம்பினான், அன்னத்தின் அறையை நோக்கி.

அன்னம் தூங்கிக் கொண்டிருந்தாள். கதவைத் தட்டினான் காமுகன். அன்னம் யார் என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தாள், தூக்கக் கண்ணோடு. அறை வாயிற்படியிலே, புதிய முகம் கண்டு, சற்றுப் பயந்து, பிறகு அவருடன் வந்தவர் என்று தெரிந்து கொண்டு, 'என்ன? என்ன வேண்டும் என்று கேட்டாள்.

உல்லாச உலகிலே நன்கு பழக்கப்பட்டவன் அவன்! "என்ன வேண்டுமா? தெரியவில்லையா?" என்றான். அன்னம் தெரிந்துகொண்டாள். திகிலடைந்தாள் அதற்குள் அவன், அவள் கரத்தைப் பிடித்துக்கொண்டான். திமிறினாள், கூவினாள். அவளுடைய சக்தி அவனுக்குச் சுண்டைக்காய்! கூவிய வாயிலே, தன் குடி நாற்றமடிக்கும் வாயைக் குவித்தான். கட்டிலின் மீது அமளி!

ஐயோ அம்மாவை எழுப்புகிறேன். என்னை யாரென்று நினைத்தாய்? என்னைக் கலியாணம் செய்து கொடுக்கப் போகிறார்கள்.',

"இப்போது நடக்கப்போவது என்னவாம்?"

"இந்த மாதிரி தொழிலுக்கு நான் இஷ்டப்படவில்லை தெரியுமா? எங்கம்மாவுக்குத் தெரிந்தால் என்னை சும்மா விடமாட்டாள்."

"சரிதாண்டி! அவனிடம் நான் சொல்லி விட்டேன். அவனும் ஒப்புக்கொண்டுதான் அழைத்து வந்தான் என்னை,"

"நிஜமாகவா? என்னைக் கலியாணமல்லவா செய்ய ஏற்பாடு செய்தார்கள்?"

கழுத்திலே தாலி கட்டினால்தான் கலியாணமா? கலியாணம் செய்து கொண்டு பிறகு நடுத்தெருவிலே

விட்டுவிடவில்லையா ? நான் உன்னை கடைசி வரை காப் பாற்றுவேன்."

"ஊஹும், நான் ஒத்துக்கொள்ளமாட்டேன்."

கடைசியில் அவள் ஒத்துக்கொண்டாள். எதற்கு? விடியற்காலை 5 மணிக்கு, கதவைத் திறந்து அவனை வெளியே அனுப்ப! அவன் மகா சமர்த்தன். அவளை இணங்கச் செய்துவிட்டான். தாயம்மாளுக்கு இது சம்மத மென்று அன்னத்தை நம்பச் செய்துவிட்டான்.

பொழுது விடிந்தது. போதை தெளிந்து, தாயம்மாள் புதியவனைத் தேடினாள். புன்னகையுடன், அன்னம், "அவர் அரை மணி நேரத்திற்கு முன் தானம்மா போனார். இராத்திரிக்கு வருவதாகச் சொன்னார்" என்று கூறினாள். தாயம்மாள், "அவனிடம் உனக்கென்னடி பேச்சு?" என்று கோபித்துக் கேட்டாள். அன்னத்தின் அறைக்கும் போனாள். "அடிவயிற்றிலே அடித்துக்கொண்டாள். "நீயும் இந்த வழிக்குத்தான் வந்துவிட்டாயா? அடிப் பாவி" என்று அலறினாள். அங்கு கட்டிலின்மீது அவ னுடைய கைக்குட்டை விழுந்திருக்கக் கண்டு.

"நீ சொன்னதாகச் சொன்னார். எழுப்பிக் கேட்கலா மென்று பார்த்தேன். நீ ஒரே மயக்கமாக இருந்தாய் என்றாள் அன்னம்."

தாயம்மாள் அதற்குமேல் ஒன்றும் பேசவில்லை. கன் னத்திலே கையை வைத்துக்கொண்டு உட்கார்ந்தாள், கண்களிலே நீர் ததும்பிற்று.

கண்டிராக்டரைக் கேட்டுக் கேட்டுப் பார்க்கிறாள் தாயம்மாள். அன்று வந்தாரே அவர் எங்கே? என்று. மூன்று மாதத்திற்குப் பிறகு, சிரஞ்சீவி சிவாநந்தனுக்கும், சௌபாக்கியவதி சுந்தரிக்கும் விவாஹ சுப முகூர்த்தம் என்ற திருமணப் பத்திரிகையைக் கொடுத்தார் கண்டிராக் டர். அன்று வந்தானே அவனுக்குத்தான் கலியாணம் என்று சொன்னார்.

தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி கலியாணப் பத்திரத்திலே எழுதியிருந்தது. தாயம்மாள் "அடபாவி! என் குடியைக் கெடுத்தானே" என்று சபித்தாள்.

"ஏண்டி! தடிக்கழுதே அவனைத் திட்டுகிறே" என்றார் கண்டிராக்டர்.

"அன்னம் மூணு மாசம் ஆச்சு தலை முழுகி."

"அப்படியா? அவளா?"

"ஆமாம்! அன்று அழைத்து வந்தாயே? அன்று அன்னத்தை சரிப்படுத்திவிட்டான். இந்தப் பைத்தியக்காரப் பெண்ணும் இடம் கொடுத்துவிட்டு இப்போது முழிக்குது.

"ஒரு நல்ல இடமாகப் பார்த்து முடிப்போம் என்று நினைச்சேன். மூணு மாசமா?"

"அதோ கேக்கலையா, அவ வாந்தி எடுக்கிற சத்தம்!"

ஆமாம்! அன்னம் கரு நோயினால் வாந்தி எடுத்துக் கொண்டுதான் இருந்தாள். தாயின் வழி மகளும். ஆடவரின் காம உணர்வும், கட்டுப்பாட்டுக்காகக் காதலைக் கருக்கும் உள்ளமும், விபசாரிகளை உண்டாக்குகிறது! தாயம்மாளும், அன்னமும் அதற்குச் சாட்சிகள். ஆனால் உத்தமர்கள் வாழும் இந்த உலகிலே, அந்த ஊமைகளின் கண்ணீரைக் காணவா போகிறார்கள்? இப்போது தாயம்மாளின் பிரார்த்தனை "காளி நல்லபடியாக ஒரு குறையும் வராமல் என் மகள் பிரசவிக்க வேண்டும்" என்பதுதான்! "என் மகளைக் கெடுத்த பாவி தலையிலே இடிவிழச் செய்" என்று காளியிடம் தாயம்மாள் முறையிடவில்லை. தனக்கு அதுபோல நேரிட்டபோது முறையிட்டு என்ன பலன் கண்டாள், பாபம்!




"விபசாரியா?"—கோபத்துடன் இக் கேள்வி பிறக்கிறது.

"ஆமாம்"—சோகம் கப்பிய குரலில் பதில் வருகிறது.

கேள்வி கேட்டவர் திகைத்து நிற்கிறார். அவர், வெட்கத்தால் அவள் நிலைகுலைந்து நிற்பாள் என்று எதிர்பார்த்தார். பதிலோ அவ்விதமில்லை. அவள் பேச்சை நிறுத்தவில்லை.

"ஆமாம்—ஏன் என்று கேட்கிறீர்கள்?—அவள் குரலிலே சோகத்தையும் சிதைத்துக்கொண்டு, நகைச்சுவை வெளிவந்தது.

"இல்லை"—பயத்துடன் பேசலானார் அவர்.

"அந்தக் கேள்வியைக் கேட்டுவிடாதீர்!"—அவள் பேசுகிறாள்—பேச்சா அது! கேலி செய்கிறாள்!

"ஏன் தைரியமாகப் பேசும் பாவனையிலே, திகிலைத் திரையிட்டுப் பேசுகிறார் அந்த ஆசாமி.

"நான் ஏன் விபசாரியானேன் என்ற கேள்வியைக் கேட்டுவிட்டால், குற்றவாளி யார் என்று கண்டுபிடிக்க வேண்டிய வேலை உமக்கு ஏற்பட்டுவிடும்." அவள்தான் கூறினாள்—ஆனால், கேள்வி கேட்டவரின் கண்களுக்கு,

அவள் தென்படவில்லை—வேறு ஏதேதோ உருவங்கள்—தெளிவில்லை—ஆனால் பெண் உருவங்கள், புகைப்படலத்தால் மூடப்பட்ட உருவங்கள் தென்பட்டன. அவர்களெல்லாம் யார்? வனஜாபோல இருக்கிறது! இல்லை, இல்லை, வாழை இலைத் தோட்டக்காரி முனி—இல்லையே—வளைந்தான் வீதி குப்பிபோல இருக்கிறதே—இப்படி எண்ணங்கள் அவர் மனதிலே. எதிரே நின்றவள் ஒருவள் தான்—அவர்கண்களுக்கு மட்டும் மாறி மாறித் தோன்றின—பல மாதரின் உருவங்கள்—அனைவரும், அவருடைய காமப் பசிக்கு விருந்தளித்தவர்கள் - அவரால் விபசாரியானவர்கள். அவரால் மேற்கொண்டு விசாரணை நடத்த முடியவில்லை. "வழக்கு மறுநாள்" என்று சுருக்கமாகக் கூறிவிட்டு மாளிகைக்குள் போய் விட்டார். அவள் வெற்றிப் புன்னகையுடன் வீடு சென்றாள்.

* *

மாளிகையிலே பிரத்யேக மகாநாடு—மண்டபத்திலல்ல—மாளிகையின் பின்புற மாட்டுக்கொட்டகையில்.

"ஆமா! ஏன் எஜமானரு திருதிருன்னு விழிச்சாரு? அந்தத் திருட்டுச் சிறுக்கி படபடன்னு பேசின. இவர் கையிலே இருந்த தடிக்கம்பாலே அவளைச் சாத்துவதை விட்டு, ஏன் அவ எதிரே, தலையைத் தொங்கப் போட்டு கிட்டாரு?"—மருதாயி, உள்ளபடியே தான், சந்தேகம் போக்கிக்கொள்ள வ்விதம் கேட்டாள். இந்தச் சகஜமான கேள்வி ஏனோ, அவள் புருஷன் பொன்னனுக்குக் கோபமூட்டிவிட்டது.

"ஏண்டி, உனக்கு கெட்ட எண்ணமும் கேடுகெட்ட புத்தியும் இருக்கு. பாவம், அவரே, என்னமோ, மனசு இளகி, அந்தப் பொம்பளையைச் சும்மா வாய் மிரட்டோடு விட்டாரு. நீ அவளை ஏன் அடித்துக் கொல்லலேன்னு கேட்கறயே! மனசு ஏண்டி உனக்குக் கல்லாப்போச்சு!" என்றான் பொன்னன், விடுவாளா மருதாயி

"கிளம்புவீங்கன்னு தெரியுமே எனக்கு! அந்தக் கோண வகுடுக்காரியைக் கண்டாத்தான் நீங்க கொலையற வழக்கமாச்சே. இந்தப் பாழாப்போன கண்ணு என்ன குருடாவாப் போச்சி. அவளும் பல்லைக் காட்டுவா, நீங்களும் வளையறதும் நெளியறதுமா இருப்பீங்க. நான் காணாததா இந்த கூத்து! அதனாலேதான் பாவம், உருகுது உங்களுக்கு. அவளுக்கு எஜமான் தண்டனை தரக்கூடாதுன்னு தோணுது,"

"சரிதான் கிடடி! நான் ஒரு பாவமும் அறியேன்."

"அதுவுந்தான் தெரியும் எனக்கு. கூத்தாடிப் பார்த்தீங்க, பலிக்கலே!"

"கிடக்குது போ, மருதாயி, உன்கிட்ட இப்பச் சொல்லிப் போடறேன் நிஜத்தை. எனக்கும் அந்தப் பெண் மேலே கொஞ்ச நாளா கண்ணுதான்... இப்ப இல்லே ...அது உன்னைக் கட்டிக்கிறதுக்கு முந்தி......"

"சொல்றதுன்னு ஆரம்பிச்சி, ஏன் பொய்யைத் கொட்டறிங்க, அவத்தான், என்னைப் பாக்கிற போதெல்லாம் கேட்பாளே, பெரிய சீமாட்டிபோலே. அது ஒரு தினுசா பேசுவா அடி மூச்சு கலந்து, "ஏண்டிம்மா, உன் வீட்டுக் காரரு சௌக்கியமாடிம்மா"ன்னு.

"அப்படியா கேட்பா? ஆமா, நீ ஒருநாள் கூட என் கிட்டச் சொன்னதே இல்லையே."

* * *

மாளிகைக் கூடத்திலேயோ, வழக்கை விசாரிக்கப் போய் விசாரத்தை வரவழைத்துக்கொண்ட மல்லீசுரர், எப்போதும்போல, திருவாசகத்தை, இனிய, மெல்லிய குரலில் படித்துக்கொண்டிருந்தார். படித்தார் என்று கூடக் கூறுவதற்கில்லை. அவருக்குத் திருவாசகம் மனப்பாடம் — எனவே பாராமலே பாடிக்கொண்டிருந்தார்

என்று கூறலாம். கண், புத்தகத்தின் மீது நடமாடிற்று—எழுத்தல்ல தெரிந்தது — தோட்டம் — கிணற்றடி — நெல் உலர்த்தும் இடம் — பஜனை மண்டபம் — ஓட்டல் — இப்படிப் பல இடங்கள் தெரிந்தன! அவ்வளவும் விசாரிக்கப்பட வேண்டிய வழக்குகள்! அவரையும் அறியாமல், அவருக்குச் சிரிப்பு வந்தது.

* * *

"ஏண்டி, சனியனே! என் பேரை இழுத்துவிட்டு விட்டாயோ?"

"இழுத்துவிடவேணுமா? ஐயாவுக்குத் தெரியாதா?"

"அடி பாவி! என்னடி நடந்தது?"—"விசாரணை."

"என்ன கேட்டார்?" — "விபசாரம் நடந்ததாமே, உண்மையா? என்று கேட்டார்,"

"அவ்வளவு பச்சையாகவா கேட்டார்?"—"பச்சையாக மட்டுமா! சுருக்கமாக, சுரீல் என்று கன்னத்திலே அறைவதுபோலக் கேட்டார்—'விபசாரியா?' என்று."

"நீ......?"—"ஆமாம், என்றேன்,"

"தைரியமாக?" — "தைரியமாக மட்டுமில்லை! ஏன் அனாவசியமான கேள்வியைக் கேட்கவேண்டும்? வேறே வேலை இல்லையா என்று அதட்டுகிறது போலக் கேட்டேன்."

"எவ்வளவு தைரியமடி உனக்கு!"

"எவ்வளவு பயங்காளியாக இருந்தேன்! 'செ! பயப்படாதே! நான் இருக்கிறேன் பயப்படாதே தலையா போய் விடும்? யாருக்குத் தெரியப்போகுது? எங்க அண்ணன் தானே, பெரிய தனக்காரரு, உனக்கு ஒரு தொல்லையும்

வராது. நான் இருக்கிறேன், பயப்படாதே' என்று ஏறக் குறைய ஒரு மாதம் தைரியம் ஊட்டினீரே, அதனாலேதான் முதன்முறை என் கையைப் பிடித்து இழுத்தீரே, கத்தரித் தோட்டத்தில் அப்போது பயத்தால் வெட வெட என்று உதறிய நான், இன்று, உன் அண்ணன் எதிரே கல் சிலை போல நின்றேன்—கல்போலப் பேசாமலில்லை—பேசினேன்."

"அண்ணன் என்ன சொன்னார்?" — "என்ன சொல்வார்?"

"உயிரை வாங்காதே! நடந்ததைக் கூறு." — 'விபசாரி தானா' என்று கேட்டார்—கேட்க......"

"தன் தம்பியால் விபசாரியாக்கப்பட்ட என்னை, அவர் தைரியமாக அந்தக் கேள்வி கேட்கவே, நான் கோபங் கொண்டு, 'ஆமாம்! விபசாரிதான்! ஏன் விபசாரி யானேன் என்று கேட்கிறீர்களா?' என்று கேட்டேன்."

"அடி பாதகி! நீயாகவா அவர் வாயைக் கிளறினாய்?"

"ஆமாம்! உன் அண்ணன் ஊமையானார்!"

"அப்பா! தப்பினேன்! அவர் 'ஏன் விபசாரியானாய்? யாரால் நேரிட்டது?' என்று கேட்டுவிட்டிருந்தால், என் கதி என்ன ஆவது? நான்தான் இதற்குக் காரணம் என்று கூறிவிட்டிருப்பாயல்லவா?"

"இல்லை! நான் அதைக் கூறியிருக்கமாட்டேன்."

"அப்பா! பாதிப் பிராணன் வந்தது. என்னை எங்கே காட்டிக்கொடுத்துவிடுகிறாயோ என்று பயந்தேன்."

"உன்னை ஏன் காட்டிக்கொடுக்கப்போகிறேன்! பைத் யம்! நீ, முதல் குற்றவாளி அல்ல! இரண்டாம் நம்பர்! உன் இச்சைக்கு நான் இறையாவதற்கு முன்பே....."

'' முன்பே...?' – முன்பே......'

' கள்ளி! கத்தரித் தோட்டத்திலே பத்தினி வேஷ மிட்டாயே! அதற்கு முன்பே கைகாரிதானா நீ? கழுதே! எவன் அந்தப் பயல்?

' உன்னைவிடப் பெரியவர் வயதில்......வயதில் மட்டுமல்ல அனுபவம், சாமர்த்தியம், அந்தஸ்து, படிப்பு சகலத்திலும். முட்டாளே! நான் உனக்கு கூத்தியாவதற்கு முன்பு, உன் அண்ணியாக இருந்தேன் — அதே தினத்திலே, உன்னைக் காணுமுன்பு — நீ கத்தரித் தோட்டத்தைக் காமக்கூத்தாடத்தக்க இடம் என்று எண்ணினாய் — உன் அண்ணன், காளி கோயில் பாழ் மண்டபமே போதும் என்றார்! நான் அலுத்துத் தூங்கிக்கொண்டிருந்தேன் அங்கு. காலைக் கும்பிட்டுக்கூடப் பார்த்தேன்; தட்டி எழுப்பிக் கட்டிப் பிடித்தபோது......'

' என் அண்ணனா!—.

' ஏன்? அவனும் ஒரு ஆடவன்தானே! அதிலும் ஊருக்குப் பெரியவன் — ஏழைகளை விசாரித்துத் தண்டிக்க அதிகாரம் படைத்தவன்! நான் ஏழை, விதவை, பிறகு இரையாகத்தானே வேண்டும், உன் அண்ணன் போன்ற காட்டு ராஜாவுக்கு!'

' என்னால் நம்பவே முடியவில்லையே......'

' நம்பிக்கை பிறக்கப் போய்க் கேள் உன் அண்ணனை. தைரியமிருந்தால் நாளைய தினம் விசாரணையின்போது, நான் யாரால் விபசாரியானேன் என்பதைக் கூறும்படி என்னையே கேட்கச்சொல்லு. வெட்டவெளிச்சமாக்கிவிடுகிறேன் உங்கள் யோக்கியதை பூராவையும், வேலனும் நானும், வெளியூர் ஓடிவிடப் பிரயத்தனப்பட்டோம் என்று குற்றம் சாட்டி விசாரிக்கத் துணிந்தார் உன் அண்ணன். வேலன், குற்றம் செய்த என்னை—கொடுமைக்கு ஆளான என்னை — காப்பாற்ற, காளிமீது ஆணையிட்டுக் கைபிடித்

தான், ஆத்தா எதிரிலே. இதோ பார்! தாலிகூடக் கட்டினுன். இந்த ஊரிலே இருந்தாத்தான் ஏளனமாகப் பேசுவாங்க, வா, நாம் வேறே ஊருபோவோம் அங்கு புருஷனும் பெண்ஜாதியுமாக வாழ்வோனு சொன்னுன். புறப்பட்டோம்—ஊர் கோடியிலே, நீ ஏவின வேட்டை நாய்களிடம் பிடிபட்டோம்—வேலனை அவர்கள் துடிக்க அடித்தனர்—என்னை விசாரணைக்குக் கொண்டு வந்து விட்டனர். நான் படவேண்டிய அளவு வேதனை பட்டாயிற்று விசாரணை நடக்கட்டும், ஊரறிய உலகறிய—உள்ளது அத்தனையும் வெளியாகட்டும்னு துணிந்துதான் பேசினேன். உன் அண்ணன் கோழை—எங்கே வெளியாகுதோன்னு பயந்து கிடக்கிருன். நீயோ, வேலன் கிடக்கருன் உடல் வீங்கிப்போய், ஓட இருந்தவனைக்கொண்டு வந்தாச்சி, இனி நமக்கு வேட்டைதான் என்று நினைக்கறே, நான் என்ன தீர்மானத்தோடு இருக்கிறேன் தெரியுதா?''

"என்னடி மிரட்டறே!''

தெளிவான பேச்சு இவ்வளவுதான்! பிறகு அமளி! வெற்றி அந்தப் பெண்ணுக்கு! காமுகன் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்!

"வேலா! போனது போகட்டும். அந்தப் பெண்ணை நான் மன்னித்துவிடுகிறேன். நீ அவளைப் பெண்ஜாதியாக்கிக்கொண்டது நல்லதுதான். வேறே ஊருக்கு, விடிவதற்குள்ளே புறப்படணும். நம்ம வண்டி ரெடியா இருக்கும். கிளம்பு. வண்டிக்காரனிடம் இரகசியமாக விஷயத்தைச் சொல்லி இருக்கிறேன். பொழுது விடிந்தா, இந்தக் கிராமத்துப் பயலுக, கண்டது கண்டபடி பேசும். விபசாரம் போனவளைத் தாண்டித்தாகணும்னு பேசுவானுக. அதனுலே......''—மல்லீசுரர் வேலனிடம் பேசிக்கொண்டிருந்தார் இதுபோல். ஒரு கோரச் சத்தம் கேட்டு இருவரும் திடுக்கிட்டனர்!

"யாரோ—கிணற்றிலே......'' என அலறினுன் வேலன்!


மல்லீசுரர் ஆட்களைக் கூவி அழைத்தார் தீப்பந்தங்களுடன் ஆட்கள் அங்கும் இங்கும் ஓடினர்.

காளிகோயில் கிணறு, படுபாதாளம்! அதிலேதான் அவள் வீழ்ந்துவிட்டாள்.

* * *

இரண்டு பிணங்கள்! மல்லீசுரரின் அதிகாரத்துக்கு மேற்பட்ட வழக்கு! எனவே பக்கத்து ஊர் போலீஸ் அதிகாரி பிரசன்னமானார் பிரேத விசாரணைக்கு. மல்லீசுரரின் தம்பி மார்க்கண்டன், இரத்தம் கக்கி இறந்தான்—பிசாசு அறைந்தால், பிசாசுபிடித்தாட்ட, கருப்பி காளிகோயில் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டாள். இது பஞ்சாயத்தார் தீர்ப்பு.

# சொல்வதை எழுதேண்டா!



“டே! மண்டு! சாட்டாச்சேன்றே? சரி கொஞ்சம் உட்கார். நேக்குக் கொஞ்சம் கையை வலிக்கிறது. நான் சொல்லிண்டு வர்ரேன். சமர்த்தா எழுது, தெரியறதோ”

“ஆகட்டும் மாமா! லெடரோ?”

“எதா இருந்தா என்னடா நோக்கு? சொல்வதை எழுதேண்டா!”

“ஆஹா! இதோ லெடர் பேபர் எடுத்துண்டு வர்ரேன்”

“பார்க்கணும் உன் சாமர்த்தியத்தை. எந்த லெடர் பேப்பர் எடுத்துண்டு வர்ரே”

“ஏன், ‘ஜர்னலிஸ்டு’ லெடர் பேப்பர்தான்”

“மண்டுன்னு சரியா இருக்கு. இப்ப திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாருக்கு லெடர் எழுதணும். அதற்கு இந்த லெடர் பேப்பர் ஆகாது, போய் ராகவாச்சாரியார், பிரசிடெண்ட், ராம பக்தஜன சபான்னு இருக்கே, அந்த லெடர் பேபர் எடுத்துண்டு வாடா”

“அனுமார் பிளாக் போட்டிருக்கே!”

"அதுதாண்டா மண்டு! அதுதான்."

மாமனும் மருமானும் அப்படித்தான் வேடிக்கையாகப் பேசிக்கொள்வது வழக்கம். எங்கேயும் என்று சொல்ல வில்லை. ராகவாச்சாரியார் 'ஆத்திலே' அப்படித்தான் வழக்கம்.

"ஏண்டி! இன்னிக்கி நம்ம ருக்கு பலேபேஷா இருக் காளே. ஆத்துக்காரன் பார்த்தானோ, மயக்கமடிச்சி விழுந்துடுவன்" என்று ராகவாச்சாரியார், தன் குமாரி ருக்குவைப்பற்றிச் சகதர்மிணி சாந்தாவிடம் பேசுவார். ருக்குவையேக் கூடக் கேட்பார் சில சமயம், "என்னடி அது தாடையைத் தடவிண்டு நிற்கறே. சுந்தரம், கடிச்சுட் டானோ?" என்று. சுந்தரம், ருக்குவின் புருஷன், அவன் "மாமனார் ஆடற விளையாட்டைப்போல நேக்குத் தெரி யாதே" என்று மாமனாரிடம் வேடிக்கையாகத்தான் பேசு வான்.

"மண்டு" அதாவது மற்றோர் மருமான், உறவின் முறை பெண்கொடுத்து ஊர்ஜிதம் செய்யவில்லை, பெண் வேறே இல்லாததால் வேலை வாங்கித் தருவதாக, வர வழைத்திருந்தார் வரதனை. அவனுக்குத்தான் அந்த 'மண்டு' பட்டம்.

மண்டு, லெடர் பேபருடன் வந்து உட்கார்ந்தான். எழுதுவதற்கு, ஐயர், துவக்கினார்.

"சீமான் திவான்பகதூர் தீர்த்தகிரி முதலியாரவர் களுக்கு," என்று கூறினார், மண்டு மளமளவென்று எழுதி "களுக்கு" என்று கூறினான், "டே! ஸ்ரீராமஜெயம் போட்டாயா?" என்று கேட்டார், ராகவாச்சாரியார். "இல்லையே! சொல்லலையே!" என்றான், மண்டு, "போடா இதைக்கூடச் சொல்வாளாக்கும்" என்றார், அதையும் எழுதிவிட்டு, மேலே கூறச்சொன்னான், "முதலியாரவர் களுக்குச், சர்வமங்களானி இஷ்ட சித்திரஸ்து" என்று கூறினார் ராகவாச்சாரியார், மண்டு, எழுதிக்கொண்டிருக் கையில் ராகவாச்சாரி, "அவன் இஷ்டம் என்ன தெரி யுமோ, ஊர்த்தாலியை அறுக்கணும். திவான்பகதூர்

முதலியார் என்றால் தேசமே நடுங்கவேணும். கவர்னர் பங்களாவை விலைக்கு வாங்கணும், இப்படி எல்லாமிருக்கும்'' என்று வர்ணித்தார். எழுதுவதை நிறுத்திவிட்டு, மண்டு "ஏம் மாமா! அவ்வளவு பேராசைக்காரனா! அப்படிப்பட்டவனுக்கு சர்வாபீஷ்ட சித்திரஸ்து சொல்றேளே?'' என்று கேட்டான். "சொன்னதை நீ எழுதேண்டா. நான் சொன்னா அவன் ஆசை எல்லாம் சித்தி ஆகிவிடறதோ. அவனுக்கு அதனாலே இலாபம் இல்லை. அந்த வார்த்தையைச் சொல்றதாலே நமக்கு நஷ்டம் என்ன? சும்மா, எழுதி அனுப்பினா, பய, பல்லிளிப்பான், வேறே என்ன? எழுது!'' என்றார், எழுதினான். ராகவாச்சாரி மேலும் சொல்ல ஆரம்பித்தார், "நான் எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் பிறத்தியாரிடம் சொல்கிற வழக்கமே கிடையாது.'' இதைச் சொன்னதும், மண்டு, எழுதவில்லை, சிரித்தான்.

"மாமா! என்ன போடு போடறீர். வாசல் கூட்டுகிறவளிடமிருந்து வருகிறவா போகிறவா ஒவ்வொருவரோடும் கஷ்ட சமாசாரம் சொல்லத்தானே உமக்குப் பொழுது இருக்கு. பிறத்தியாரிடம் சொல்றதே கிடையாதுன்னு எழுதச் சொல்றீரே'' என்று மாமாவைக் கேட்டான். மண்டுதானே அவன்! மாமாவின் பிரத்யேக முறைகள் மாமி காதிலே வைர ஓலையாகவும், ருக்கு கழுத்தில் லாங் செயினாகவும், பெரிய மருமான் கையில் ரிஸ்ட் வாச்சாகவும், விளைந்ததை அவன் அறிவானா? மாமா, எப்படி ஒவ்வொரு விஷயத்தையும் அவனுக்கு விளக்கமுடியும்! முறைத்துப் பார்த்தார், அவன் எழுதினான்.

"என் மகன், பஞ்சு, பி. ஏ. வகுப்பிலே படிக்கிறான் என்பது தங்களுக்குத் தெரியும்'' என்றார், பேசாமல் எழுதினான் மண்டு. "ஏண்டா இதற்கு ஒண்ணும் கேட்கலையோ? எப்படிப் பஞ்சு என்று கூறலாம், அவன் தான் ஆர். பி. நாதன் என்று கையெழுத்துப் போடுகிறானே, எனக் கேட்பதுதானே'' என்று கேலி செய்தார், ராகவாச்சாரி. பஞ்சநாதன், மகன் பெயர். இவர் அதைத் தான் பஞ்சு என்று குறிப்பிட்டார், அன்புச் சுருக்கமாக.

நாகரிகச் சுருக்கமாக, பையன் ஆர். பி. நாதன் என்றுதான் எழுதுவது வழக்கம். விஷயம் அவ்வளவு பிரமாதமில்லை என்று, மண்டு தள்ளிவிட்டான். "மேலே சொல்லுங்க மாமா!" என்று கூறினான். "பஞ்சுவுக்குக் காலேஜ் செலவுக்குத் தருவதற்கு, நான் படுகிற சிரமம் இருக்கே, அது சாட்சாத் ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்குத்தான் தெரியும்" என்றார் ராகவாச்சாரி. 'உம்' போட்டான் மண்டு, எழுதிக்கொண்டே "அதிலும் இந்த மாதம், ராமபக்தசபா வருஷாப்திக்காகச் செலவு ஏராளமாகப் பிடிச்சுவிட்டது" என்றார்; எழுதினான். அந்த வருஷ விழா சாக்கிலே வாங்கின திராட்சையும், பாதமும், முந்திரியும், பருப்பும், வேட்டியும், வெள்ளி வட்டிலும், வேறு பலப்பல சாமான்களும், வீட்டிலே எங்கெங்கும் உள்ளன என்பது மண்டுவுக்குத் தெரியும்! தெரிந்து என்ன செய்வது; ராகவாச்சாரி சொல்கிறபடி எழுதத்தானே வேண்டும்! 'ஆசையாலே, என் மீது ரொம்பத் தயவு வைத்து, பையனிடம் ஒரு ஐம்பது ரூபாய் தரவேணும்' என்றார். "ஐம்பதா?" என்று ஒரு முறை கேட்டுக்கொண்டான் மண்டு. ஏனெனில் அவனுக்குச் சந்தேகம், பஞ்சநாதனுக்குப் பணம் தேவையா என்பதிலேயே. "ரேடியோ" நாடகத்திலே நடித்ததற்காக, பஞ்சநாதனுக்குக் கிடைத்த இருபது ரூபாயைக்கூட அவன் அப்பாவுக்கு மணியார்டர் செய்திருந்தான். அந்தச் சந்தோஷத்திலே, பகவானுக்கு அக்ராவடசல் கூடச் செய்தார்கள். அப்படி இருக்க ஐம்பது ரூபாய் எதற்காகப் பஞ்சுக்கு, என்று சந்தேகம். "ஆமாம், ஐம்பதுதான் முட்டாளே, அவ்வளவு பெரிய ஆசாமியிடம் ஐந்து பத்துத் தான் கேழ்ப்பாளோ? நாமென்ன அவன் ஆத்திலே வண்டி ஓட்டறவாளா?" என்று விளக்கம் உரைத்தார் ராகவாச்சாரி. "இந்த ஐம்பது இந்தச் சமயம் எனக்கு ஐந்நூறுக்குச் சமானம்" என்று கூறினார் ராகவாச்சாரி. மண்டுவுக்கு இதுவும் புரியவில்லை. ராகவாச்சாரியின் அண்ணன் உள்ளூர்ப் புரோகிதர். அவர் எந்த வீட்டில் எவ்வளவு கொடுத்தாலும், கொடுத்தது கொஞ்சமாக இருந்தாலும் இதையே அதிகமாக எண்ணிக்கொள்ள

வேண்டும் என்று கூறச் செய்பவர். ராகவாச்சாரியார், புதிய முறைப் புரோகிதர்தானே! "தங்களுடைய தர்ம சிந்தனையையும், தயாள குணத்தையும்........." என்று சொன்னார் ராகவாச்சாரி, எழுதிவிட்டான் மண்டு, வாசகத்தை முடிக்காமல் யோசிக்கலானார் ராகவாச்சாரி. "ஏன் மாமா தயாள குணத்தையும், எழுதிவிட்டேன்" என்றான் மண்டு. "இரடா! ஸ்துதி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நல்லது, அதிலும் அந்தப் பயலுக்கு உச்சி குளிரும்; தர்ம சிந்தனை, தயாள குணம், போதாது, இன்னும் ஏதாவது சேர்க்கணும்; என்ன போடலாம், சொல்லேன் நீதான்" என்று மண்டுவையே கேட்டார். "பிராமண பக்தின்னு போடு வமா?" என்று யோசனை சொன்னான் மண்டு. "பித்துக் குளி! அந்த வார்த்தையைப் போடவேபடாது. இப்போ பிராமண பக்தின்னாலே, கேலி பேசறவா ஊரெல்லாம் அதிகமாகிவிட்ட காலம், இவன் கூடத்தான், ஏதோ நமக்கு சமயாசமயத்திலே ஒத்தாசை செய்கிறானே தவிர, மத்தவா ளிடம் பேசறபோது, "இந்தப் பார்ப்பாரப் பயலுக" என்று தான் நம்ம சமூகத்தையே வைகிற வழக்கம். ஒரு தடவை, அவன் திமிரைப் பார்டா, என் எதிரிலேயே வைதான்" என்று திவான்பகதூரின் குணத்தை விளக்கினார் ராகவாச் சாரி. "உம்ம எதிரிலேயா? சும்மாவா இருந்தீர் மாமா?" என்று கேட்டான் மண்டு. "சும்மா இராமே அவனிடம் சண்டைக்கு நிற்பாளா? காரியம் பெரிசா? வீரியம் பெரிசா? நான் பேசாமே கேட்டுண்டுதான் இருந்தேன். அவனுக்கே பிறகு, நான் இருக்கிறேனே, ஒரு சமயம் கோபிப்பனோன்னு சந்தேகம். உடனே என்னைப் பார்த்தான், சிரிச்சிண்டே "ஏன் சாமி! நம்ம சமூகத்தைக் கொறை பேசறானே இவன்னு கோவமா?" என்று கேட்டான். "அதெல்லாம் இல்லை, முதலியார்வாள்! லோகாச்சாரப்படிதானே சொன் னேள்" என்று ஒரு போடு போட்டேன். பயலுக்குப் பிரமாதமான திருப்தி. "உங்க விஷயம் தனி, சாமி. உங்களைப்போலவே குணமும் மனமும் உள்ள பிருமணாளைக் குறை சொல்லலே, மத்ததுகளைத்தான் திட்டினேன்"

என்று சமாதானம் பேசினான், வழக்கமாகத் தருவதைவிட அன்று ஒரு பத்து ரூபாய் அதிகமாகத் தந்தான். அதாவது நம்ம நரசிம்மாச்சாரியார் இங்கே "இராமாயணம்" படித்தாரே, அந்தப் பட்டாபிஷேகச் செலவுக்கு. அப்படிப்பட்டவன் அந்த திவான்பகதூர் என்று கூறினார் ராகவாச்சாரி. மேலும் சிறிது யோசனைக்குப் பிறகு, தருமசிந்தனை தயாள குணத்துடன், பகவத் கடாட்சம் பெற்ற என்ற பதத்தைச் சேர்த்தார், வாசகத்தைப் பூர்த்தி செய்ய. "பகவத் கடாட்சம் பெற்ற தங்களைப் போன்றவாளுக்கு அதிகம் சொல்லத் தேவையில்லை" என்று கூறினார். கடிதம் முடிந்தது. மண்டு சோம்பல் முறித்தான். ராகவாச்சாரி, "கையோடு கையா இன்னும் ஒரு லெட்டர் எழுதிவிடு, பஞ்சுவுக்கு" என்றார். மண்டு எழுத உட்கார்ந்தான். "ஜர்னலிஸ்டு" லெட்டர் பேப்பர் எடுடா" என்றார். "சிரஞ்சீவி பஞ்சநாதனுக்கு, ஆசீர்வாதம். இன்று இதே தபாலில், திவான்பகதூர் தீர்த்தகிரி முதலிக்கு ஒரு லெட்டர் எழுதி இருக்கேன், உனக்கு அவசரமாக ஐம்பது ரூபாய் தரும்படி; தருவான். அதை வாங்கிக்கொண்டு, உனக்கு ஐந்தோ பத்தோ செலவுக்குத் தேவையானால் எடுத்துக் கொண்டு, மிகுதிப் பணத்துக்கு, ஆறு கெஜத்தில் ஆரஞ்சு கலரில் பெங்கால் சில்க் சேலை விற்கறதாமே சைனாபஜாரில், அதை உன் அக்காவுக்காக உடனே வாங்கி அனுப்பவும். அடுத்த வியாழக்கிழமை இங்கே ஜில்லா கலெக்டர் வருகிறார், என்னமோ சையன்யத்துக்கு நிதி திரட்டவாம். அதிலே நம்ம ருக்கு, எதிராத்து ராஜம், நம்ம கோடிவீடு செவிட்டுச் சீமாவின் பார்யா இருக்காளே சண்பகம், இவாளெல்லாம், பெங்கால் டான்ஸ் ஆடப்போறாளாம். ஆனதாலே புடவை அவசரம். தீர்த்தகிரி முதலி கொஞ்சம் முன்கோபி. வள்ளுன்னு விழுவான். சட்டை செய்யாமே, கொஞ்ச நேரம் இருந்தா, பணத்தைத் தந்துவிடுவான். பக்குமாப் பேசனும் அவனிடம். முகஸ்துதியிலே ரொம்பப் பிரியம். பெரிய கர்மி. இருந்தாலும், நம்மிடம் பணம் தருவதற்கு மறுக்க மாட்டான். அவன்தான் நம்ம ராமபக்த ஜனசபாவுக்குப் போஷகன். திவான்பகதூர் பட்டம்,

அவனுக்குக் கிடைச்சதுக்கே, அதுதான் காரணம்னு சொல்லிவைச்சிருக்கேன். சமயம் வாய்ச்சா நீயும் சொல்லு. எப்படியும் பணத்தை வாங்கிவிடு, அசடாட்டம் இருந்து விடாதே.''

இது மகனுக்குத் தகப்பனார் அனுப்பும் கடிதம். இதனைச் சிரமமின்றி மண்டு எழுதிவிட்டான், குறுக்குக் கேள்வியே கேட்காமல். ராகவாச்சாரியாரின் ''முறை'' யைப் புரிந்து கொண்டான்.

'' அடடே! மறந்துவிட்டேன். இன்னும் ஒருவரி 'சேர்க்கணும் பஞ்சு லெடரில்' என்று சொன்னார் ராகவாச்சாரி ''சொல்லுமே, இடம் இருக்கு'' என்றான் மண்டு. ''தீர்த்தகிரிவீட்டுக்குப் போகும் போது, கொஞ்சம் உலர்ந்த உதிரி புஸ்பமும் மஞ்சத்தூளும் ஒரு காகிதப் பொட்டலத்தில் மடித்து எடுத்துக்கொண்டுபோய், அப்பா ஊரிலிருந்து அனுப்பினார் என்று கொடு'' என்று, கூறிக் கடிதத்தைப் பூர்த்தி செய்தார்.

* * *

ராகவாச்சாரியாரின் தபால்கள் பயணப்பட்டன. பெங்கால் சில்க் சேலையைப்பற்றிய நினைப்புடன் ருக்கு, நடை பழக ஆரம்பித்தாள், அதுவே ஒரு புது தினுசு டான்சாக இருந்தது. தபால்கள் போய்ச் சேர்ந்தன, ஆனால் முதலியாருக்குச் சேரவேண்டிய கடிதம் பஞ்சுவுக்கும், பஞ்சுவுக்குச் சேர வேண்டிய கடிதம் முதலியாருக்கும் போய்ச் சேர்ந்தன. பெங்கால் சில்க்காகிடைக்கும்,? திவான் பகதூர் தீர்த்தகிரி முதலியார், ராகவாச்சாரியாரை, '' அயோக்யன்? நன்றி கெட்டவன்! நயவஞ்சகன்! அவனை என்ன செய்கிறேன் பார்'' என்று ஏசி, பஞ்சுவையும் உதைப்பதாக மிரட்டியதையும்பற்றி விரிவாக எழுதி, முதலியார் விலாசமிட்ட கவரில், பஞ்சுவுக்கு எழுதிய கடிதத்தையும், பஞ்சுவுக்கு அனுப்பிய கவரில், முதலியாருக்கு எழுதிய கடிதத்தையும், மண்டு கைதவறி வைத்து அனுப்பிவிட்டதால் நேரிட்ட விபரீதத்தையும் விளக்கி, பஞ்சு தகப்பனுருக்கு விரிவாகக் கடிதம் எழுதினபிறகே, மண்டுவால் வந்த ஆபத்தை ராகவாச்சாரி உணர்ந்து சோகித்தார்.

"சொன்னதைத்தானே எழுதினேன்" என்று மண்டு முணமுணத்தான். தலையில் அடித்துக்கொண்டு ராகவாச்சாரி "நீ இல்லையடா மண்டு. நான் மண்டு. உன்னைக் கொண்டு இந்தக் காரியத்தில் இறங்கினேனே என்னைச் சொல்லணும்" என்றார். கொஞ்ச நேரம், யோசனையில் ஆழ்ந்துவிட்டு, "டே! மண்டு! வா! உன்னைவிட்டாலும் வேறுகதி இல்லை எனக்கு. போய் ஜர்னலிஸ்டு லெடர் பேப்பர் எடுத்துவா" என்று கூப்பிட்டுச் சோகம் கப்பிய குரலிலே, ராகவாச்சாரியார் சொன்னார், மௌனமாக, மண்டு எழுதினான்.

ராம பக்தஜன சபா

'இவ்வூர், ஸ்ரீராம பக்தஜன சபாவின் போஷகராக இருந்து வந்த திவான் பகதூர் தீர்த்தகிரி முதலியார், ஆச்சார விரோதமாக நடந்துவருவதால், ஷை சபாதலைவர் ஸ்ரீமான் ராகவாச்சாரியார் அவர்களுக்கு, மெம்பர்கள் புகார் செய்துகொண்டதன் பேரில், தலைவர் விஷயத்தைப் பரிசீலனை செய்து புகாருக்கு ஆதாரமிருப்பது தெரிய வந்ததால், மேற்படி சபாவின் போஷகர் ஸ்தானத்திலிருந்து, ஷை தீர்த்தகிரி முதலியாரை நீக்கிவிட்டார். அன்னார் மீது சாட்டப்பட்ட பல குற்றச்சாட்டுகளிலே முக்கியமானது, அவர் ஒரு பிராமண விதந்துவிடம் முறை தவறி நடந்துகொண்டிருக்கிறார் என்பதாகும்"

"யாருக்கு மாமா அனுப்ப. தெளிவாகச் சொல்லி விடும்" என்று பயந்து கேட்டான் மண்டு. "இது ஒரு பத்து காபி எடுத்து, மித்திரன், இந்து, விகடன், மணி, போன்ற சகல பத்திரிகைகளுக்கும் அனுப்பிவிடு," என்று உத்தரவிட்டார். மண்டு, அதை நிறைவேற்றினான். பிறகு "மீண்டும் பயந்த குரலில் ராகவாச்சாரியாரை "மாமா! கோவிக்காமே இதை மட்டும் சொல்லிவிடும். அந்தப் பிராமண விதந்து யார்?" என்று கேட்டான். "நம்ம கமலிதான்" என்றார் ராகவாச்சாரியார். கமலி, அவருடைய சகதாமிணிக்கு ஒன்றுவிட்ட தங்கை.